# முரசொலி

வார இதழ்.

ஆசிரியர் மு. கருணாநிதி.

2 அணா

முரசு 2 | சென்னை | 9—9—55 | வெள்ளி | ஒலி 24


## 'நயா திராவிடம்!'

[மாநில மாநாட்டு நிதிக்காக சென்னை மாவட்ட சார்பில், பன்மொழிப் புலவர் அப்பாதுரை அவர்கள் தலைமையில், தோழர் மு. கருணாநிதி கோகலே மன்றத்தில் 4—9—55 மாலை 6-மணிக்கு சொற்பொழிவாற்றினார். நன்கொடை கட்டணம் விதிக்கப்பட்டிருந்தபடியால்—அந்தக் கூட்டத்திலே கட்டணச் சீட்டு மூலம் 1254 ரூபாய் வசூலாயிற்று. செலவு போக 1020 ரூபாய் மாநில மாநாட்டு நிதிக்காக தரப்பட்டது. இந்தக் கூட்ட நிகழ்ச்சிகளை எல்லா தினசரிப் பத்திரிகைகளும் இருட்டடிப்பு செய்துவிட்டன. கூட்டத்தில் கருணாநிதி பேசியதை நேஷனல் புரடக்ஷன்ஸ் சடகோபன் என்பவர் 'டேப் ரிக்கார்டு' செய்தார். பேச்சின் சாரம் இந்த இதழில் தரப்படுகிறது.]

அன்புள்ள தலைவரவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இன்றைய தினம் நடைபெறும் இந்த மன்றச் சிறப்புக் கூட்டம் மாநில மாநாட்டு நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

உங்களுக்குத் தெரிந்திருக்கும், நான் ஏறத்தாழ நான்கு அல்லது ஐந்து மாதங்கள் ஆஸ்பத்திரியில் கழித்துவிட்டு—அதன் பிறகு டாக்டர் முத்தையா கண் கொடுத்தார்—அந்தக் கண்களைப் பெற்று—மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன். இந்த இரு கண்களால் உங்களைப் பார்ப்பேனா என்று நான் ஏங்க—இரு கண்களுடன் என்னை சந்திக்க முடியுமா என்று நீங்கள் ஏங்க—அந்த ஏக்கத்திற்கே இடமில்லா வண்ணம், இன்றைய தினம் நான் என் இரு கண்களுடன், பூரிப்போடும்—புது உற்சாகத்தோடும் உங்களை சந்திக்கிறேன்.

நான் ஆஸ்பத்திரியில் இருந்தபோது வெளியில் என்னவெல்லாமோ பேசிக் கொண்டார்கள். நமது தோழர்கள் ஆஸ்பத்திரிக்கே ஓடிவந்தார்கள். அவர்களிலே சிலர் "ஒரு கண் போய் விட்டதாமே!" என்று கேட்டார்கள். இன்னும் சிலர் 'ஒரு கண் தேறவே தேருதாமே!" என்று வினவினார்கள். இன்னும் சிலர் கொஞ்சம் கற்பனையையும் கூடச் சேர்த்து "ஒரு கண்ணை எடுத்துவிட்டு கண்ணாடிக் கண் பதித்து விட்டார்களாமே!" என்றும் கேட்டனர். நான் அவர்களைக் காண முடியாது. பேசவும் முடியாது. என் கூட இருந்த சத்தி போன்ற அருமை நண்பர்கள் அவர்களுக்குப் பதில் சொல்லி அனுப்பினார்கள்.

அத்தகைய சஞ்சலமும், சந்தேகமும் நிரம்பிய தோழர்களின் குரலை நான் கேட்டேன். நமது குடும்பப் பாசம் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்று மகிழ்ந்தேன்.

இன்னும் சிலர் பேசினார்கள்; "கடவுள் இல்லை என்று பேசினால் கண் எப்படியய்யா தப்பும்?" என்று! ஆஸ்பத்திரியிலே என் பக்கத்திலிருந்து கவனித்து வந்த நர்ஸ்கள்கூட அடிக்கடி சொல்லுவார்கள், "நீங்கள் கடவுள் இல்லை என்கிறீர்கள்; அதனால்தான் இவை எல்லாம்" என்று. நான் அவர்களிடம் சொல்வேன். "இந்த ஆஸ்பத்திரியிலே நான் மட்டுமில்லை; இரண்டாயிரம் பேர் இருக்கிறார்கள் நோயாளிகளாக. நான் ஒருவன்தான் கடவுள் இல்லை என்பவன்; ஆகவே இங்கு வந்திருக்கிறேன். சரி; ஆனால் மற்ற 1999-பேர்களும் ஏன் வந்தார்கள்?" என்று கேட்பேன்.

இத்தகைய வேடிக்கையும், வேதனையும் கலந்த நிலையில் ஆஸ்பத்திரியில் இருந்து—பின் மருத்துவர்களின் கடுமையான நிபந்தனையின் பேரில் ஓராண்டு ஓய்வும் பெற்றுவந்த நான், இந்தக்கூட்டம் மாநிலமாநாட்டு நிதிக்காக என்பதாலும், மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அவர்கள் தினம் தினம் என்னை வாட்டியதாலும்—இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறேன்.

இந்தப் பீடிகை எல்லாம் எதற்கு என்றால், இந்த ஒரே ஒரு கூட்டத்தோடு என்னை கொஞ்ச காலம் விட்டுவைக்கும்படி, இங்கு வந்திருக்கும் கிளைக் கழகத் தோழர்களை கேட்டுக் கொள்வதற்காகவேதான்!

இந்த நிலையில் நாம் நமது மாநில மாநாட்டை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். சென்ற ஆண்டுகளில் நாம் சாதித்தவை என்ன—இனி நாம் சாதிக்க வேண்டியவை என்ன—நம்மைச் சுற்றியிருக்கும் பிரச்சினைகள் எவை எவை—அவைகளை சமாளிக்க நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எப்படிப் பட்டவை—வரும் காலத்தில் நாம் எத்தகைய திட்டங்களைத் தீட்டவேண்டும்—நாம் வகுக்க வேண்டிய போராட்ட முறைகள் எப்படிப் பட்டவை—என்பதை எல்லாம் முடிவுசெய்ய நாம் மாநாடு கூட்டுகிறோம்—மாநில மாநாடு—திருச்சியிலே!

ஆகவேதான் நாம் தற்போது நம்மைப் பற்றிக் கொஞ்சம்—நம்மைச் சுற்றியிருக்கும் சூழ்நிலையைப் பற்றிக் கொஞ்சம்—நம்மை எதிர்த்து நிற்கும் கும்பலைப் பற்றிக் கொஞ்சம்—சிந்திக்க வேண்டிய நிலையிலிருக்கிறோம்.

நாம் முதன் முதலில் நமது உரிமை முழக்கத்தைக் கிளப்பிய நேரத்தில், எதிர் முகாம் கிளப்பிய கிண்டல் கணைகள் ஏராளம்! ஏராளம்!!

"திராவிடம்" என்ற ஒரு சொல்லே கிடையாது என்று வாதிட்டனர்—கேலி பேசினர்—பலப் பலர்!

நாம் எடுத்துக் காட்டினோம், ஆதாரங்கள்!

ஜனகனமன அதி நாயக
ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத்த மராட்டா
திராவிட உட்கல வங்கா...

பாடியிருப்பது யார்? பாரதிதாசனா? இல்லை—தாகூர்! "திராவிடமா? அது ஏது?" என்று சொன்னவர்களிடம் இந்தப் பாடலை—அது குறிப்பிடும் திராவிடத்தை—சுட்டிக் காட்டி வாதிட்டோம்!

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்




அன்புள்ள குமார்,

நீண்ட நாட்களுக்குப் பிறகு உனக்கு எழுதுகிறேன். ஆனு லும் தென்னகத்து அரசியல் நிலைமைகளில் எந்தவித மாறுதலும் ஏற்பட்டுவிடவில்லை.

ஆச்சாரியார் முன்போலவேதான் பஜனை மடங்களிலும், படித்துறைகளிலும் தன்னுடைய பணியை செய்த வண்ணமிருக்கிறார்.

இராமாயணத்தின்பாலகாண்டத்தைப் பற்றியும், பட்டாபி

# பகவத் பிரசங்கம்--பி. சி. ஜி.யிலே!

ஷேக விசேஷத்தைப் பற்றியும் பேசினார். பகவன் அருளைப் பெற வேண்டிய முறைகளைப் பற்றி உள்ளமுருகும் வகையிலே உபதேசம் செய்தார்.

இது அப்போதைய நிலைமை.

ஆஸ்திகத்தினுல் கிடைக்கப் பெறும் பேரானந்தம்—பகவத் கீதையின் தாத்பரியம்—சம்பூர்ண ராமாயணம்—சங்கரரின் சித்தாந்தம்—இவைகளைத் தலைப்புகளாக வைத்து பாமர மக்களிடையே சரிந்துவிட்ட சனாதன மாளிகையை செப்பனிட்டபடி இருந்தார்.

இப்போது அவர் தேர்ந்தெடுத்திருக்கும் சாதனத்திலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது!

அமெரிக்காவிலிருந்து வந்திறங்கிய 'மைக்'கையும், ஒலிபெருக்கிக் கருவிகளையும் வைத்துக் கொண்டு அருள்நெறிப் பிரச்சாரம் நடைபெறுவதில்லையா? அங்கே விஞ்ஞானமும், மூடநம்பிக்கையும் மோதுவதை நீ உணர்ந்திருக்கலாம்!

ஹாலிவுட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட கேமராவை இடுக்குவதற்கு தேங்காய்ப் பழத்துடன் நைவேத்யம் காட்டுவார்கள். அவ்வளவு ஏன்? ஸ்டீவன்சன் கண்டுபிடித்த ரெயில் என்ஜின் பாரதத்துக்கு வந்ததும், அதற்கு குடம் கொளுத்திக் காட்டி கன்னத்தில் அடித்துக் கொண்டவர்கள்தானே நம்மவர்கள்!

அந்த சூழ்நிலைகளைத்தான் ஆச்சாரியார் இப்போது பயன்படுத்தி வருகிறார்.

ஆச்சாரியார் விஞ்ஞானத்தை உபயோகித்து மூடநம்பிக்கையை இப்போது வளரவிடுகிறார். ஆமாம் குமார், ஆச்சாரியார் ஒரு புரட்சி செய்கிறார்!

பரந்தாமனை முன்வைத்து அருநெறிப் பிரச்சாரம் நடைபெற்றது. இப்போது பரந்தாமன் இல்லை அங்கே! பி. சி. ஜி. என்ற புது வார்த்தைகள் நடமாடுகின்றன!

இன்னும் கொஞ்சம் புரியும்படிச் சொல்கிறேன், கேள். அருமையான ராசிபுரம் நெய்யிலே அக்காரவடிசில் செய்யப்பட்டிருக்கிறது. நீ சாப்பிட உட்காருகிறாய், வாய் இனிக்க—நெஞ்சு இனிக்க! அப்போது முன்பின் தெரியாத யாரோ ஒருவன் ஓடிவந்து "அதைச் சாப்பிடாதே! அதில் விஷம் கலந்திருக்கிறது" என்று சொன்னால் உன் மனோநிலைமை எப்படியிருக்கும்? அவன் பூர்வோத்திரம்கூட உனக்குத் தெரியாது. அவனே நெய் வடியும் சோற்றிலே விஷம் வடிகிறது என்கிறான். அது நம் நாட்டு தினப் பத்திரிகைகள் சில அன்றாடம் தரும் செய்திகளைப் போல வெற்று வேட்டாகக் கூட இருக்கலாம். இருந்தாலும் உனக்குச் சாப்பிட மனம் வருமா? உனக்கு மட்டுமென்ன? ஆண்டியாகத்தான் இருக்கட்டுமே; நஞ்சு இருக்கிறது என்றால் அவனும் தீண்டுவானா அறுசுவை உண்டியை?



★ யார் இந்த ஆச்சாரியார்? மருத்துவ நூல் விற்பன்னரா? அல்லது க்ஷய நோயைப் பற்றிக் கரைகண்ட மேதையா?... ஒரு விஞ்ஞான சாதனையைப் பற்றிப் பேச இவருக்கு என்ன தகுதி இருக்கிறது?

இதே நிலையில்தான், குமார், ஆச்சாரியாரின் பி. சி. ஜி. இயக்கமும் நடைபெற்று வருகிறது!

கொடிது! கொடிது! பி. சி. ஜி. கொடிது — என்று கடிதம் எழுதுகிறார் மூக்கை அறுத்து விட்ட கொத்தலவாலைக்கு! 'குத்திக் கொள்ளாதீர்கள்'—என்று தலைப்பு தந்து 'கல்கி'யில் தொடர் கட்டுரை ஒன்றே தீட்ட ஆரம்பித்துவிட்டார்!

—இந்த வழியிலேதான் அவர் பிரச்சாரம் செய்கிறார், சென்னை அரசாங்கத்தினர் டி. பி.யைப் பற்றி நாட்டிலே பீதியை நடமாடவிட்டிருக்கிறார்கள், என்று ஆனால் அரசினரோ ஆச்சாரியாரைக் குற்றம் சாட்டுகிறார்கள்-பி. சி. ஜி.யைப் பற்றி பீதியைக் கிளப்புவதாக!

ஆக, இரு தரப்பாரும் ஒருவரையொருவர் பீதிக்குக் காரணம் யாரென்று ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்!

உண்மையிலேயே குமார், ஆச்சாரியாரின் தொடர்ந்த பிரச்சாரம்தான் பி. சி. ஜி. பற்றி நாட்டிலே நடுங்கத்தக்க பீதியைக் கிளப்பியிருக்கிறது. இதே வேகத்தில் ஆச்சாரியார் தன்னுடைய கல்வித் திட்டத்திற்கும் பிரச்சாரம் நடத்தியிருப்பாரேயானால், அதைக் கல்லறைக்கு அனுப்பி வைப்பதில் நமக்குக் கூட இன்னும் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்திருக்குமோ என்று, நான் கூட வேடிக்கையாக நினைத்ததுண்டு!

பி. சி. ஜி.யை நாட்டு மக்கள் முன்னிலையில் வைத்துவிட்டு தேன் குழலோ — தீம்பாலோ என்று சொல்லி பூரிப்படைகிறார்கள், அரசாங்கத்தார்! ஆச்சாரியாரோ, அது பாலும், பணியாரமும் அல்ல; பாஷாணம் என்கிறார்! முன்பு கதையில் குறிப்பிட்டேனே அதைப் போலவே பாமர மக்கள் இன்று நாடெங்கும் தயங்குகிறார்கள். பி. சி. ஜி. பயன் தருமா; அல்லது வெறும் பகட்டு மருந்துதானு என்று எண்ணி பயப்படுகிறார்கள்!

அப்படி வதந்தி கிளப்புவதனுல் ஆச்சாரியாருக்கு என்ன லாபம் என்று நீ கேட்கலாம். அரசாங்கம் செய்யும் காரியங்களில்உள்ள நல்லது கெட்டதுகளை எடுத்துச் சொல்வதுதானே அரசியல்வாதிகள் கடமை; அதை ஆச்சாரியார் செய்வதிலே என்ன வியப்பும் வேறுபாடும் இருக்கிறது என்றும் வினவலாம்.

உண்மைதான். ஆச்சாரியாருக்கு இதனுல் என்ன லாபம் என்பதைப் பின்னுல் சொல்கிறேன். முதலில் ஆச்சாரியார் எடுத்துக் கொண்டிருக்கும் பிரச்சினை, அரசியலில் விருப்பு கொண்டோன் எடுத்துக் கொள்ள வேண்டிய விஷயம்தானு என்பதைக் கொஞ்சம் ஆராய்வோம்.

'பி. சி. ஜி. பிரச்சினை'-என்பதன் மூலம் நமக்கு இரு விஷயங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. ஒன்று பி. சி. ஜி. மருந்தைப் பற்றிய விஞ்ஞான விஷயம். மற்றது அந்த மருந்து நாட்டு மக்களிடையே க்ஷய ரோகத் தடுப்பு மருந்தாகக் குத்தப்பட்டு, பரப்பப்பட்டு வரும் விஷயம்.

ஆச்சாரியார் வேண்டுமானுல் பி. சி. ஜி. மருந்தை **கட்டாயமாக** நாட்டு மக்களிடம் ஊசி குத்துவது மூலம் பரப்பக் கூடாது—என்று பிரச்சாரம் செய்யலாம். அதை யாரும் தடுக்க முடியாது. ஏனெனில், கட்டாயம் — கட்டாயமில்லை என்பது தனிப்பட்ட நபர்களைப் பாதிக்கும் விஷயம். இந்தி கட்டாயம் என்கிறபோதுதானே நாம்கூட அதை எதிர்க்கிறோம்! அதைப்போலவே ஆச்சாரியாருக்கு உண்மையிலேயே நாட்டு மக்களிடம் அன்பும்,பரிவும் இருக்குமானுல் அவரும் அதையே செய்திருக்கலாம். அதுதான் ஜனநாயக வழியும்கூட!

அப்படியானுல் இதில் அரசாங்கத்தின் நிலைமை என்ன?

அரசினர் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்கள், பி. சி. ஜி. குத்திக் கொள்வது **கட்டாயமில்லை** என்று! அதன்படி சுகாதாரப் பணியாளர்கள் பி. சி. ஜி. குத்திக் கொள்ளும்படி யாரையும் கட்டாயப் படுத்த மாட்டார்கள். இஷ்டமிருந்தால் யாரும் குத்திக் கொள்ளலாம்—இது அரசினர் கொள்கை.

அப்படியானுல் ஆச்சாரியார் நிலைமை யாது?

அவர் பி. சி. ஜி. குத்தப்படுவதை எதிர்க்கவில்லை; பி. சி. ஜி. மருந்தையே எதிர்க்கிறார்.

○ தொடர்ச்சி 8-ம் பக்கம்

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 9—9—55 வெள்ளி

## பிணக்கொலு வேண்டாம்!

மான்சிங் என்ற வடநாட்டு மலைக்கள்ளன், போலீசார் தொடுத்த போராட்டம் காரணமாக பிணமாக வீழ்ந்த கதையைப் பத்திரிகைகளிலே பார்த்தோம்!

மான்சிங் கற்பாறையை நெஞ்சமாகக் கொண்டவனும்; கருநாகத்தைவிடக் கொடியவனும்; சிசுக்களையும் சித்ரவதை செய்யும் சூன்யக்காரனும்—கேள்விப் படுகிறோம் இப்படி!

ஆயிரத்துக்கு மேற்பட்ட கொள்ளைகள்—ஏறக் குறைய நூற்றி ஐம்பதிற்கு மேற்போகாத படுகொலைகள்—இவையெல்லாம் அவன் பெயரோடு இணைந்து போலிசாரின் ரிக்கார்டுகளிலே பதிவு செய்யப் பட்டிருக்கின்றன!

மூன்று மாகாணத்து நிர்வாகத்தையே அவன் சவால் விட்டிருக்கிறான்! அவனைப் பிடிப்பதற்காக இதுவரையில் ஒரு **கோடி ரூபாய்** செலவு செய்யப் பட்டிருக்கிறது! அவன் உயிரோடு உலவுவதே இந்திய அரசாங்கத்தின் போலீஸ் இலாக்காவிற்கு அவமானத்தைத் தந்திருக்கிறது!—இப்படியெல்லாம் செய்திகள் வந்திருக்கின்றன!

ஆக; ஒரு கொலைகாரன் பிடிபட முடியாமல் கொலை செய்யப் பட்டதில் நியாயமிருக்கிறது—அதைப் பத்திரிகைகள் முதற் பக்கத்திலே கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருப்பதை நம்மால் புரிந்து கொள்ளவும் முடிகிறது! ஆனால் அதற்குப் பின் நடந்த நிகழ்ச்சிகள்தான் வேதனை தருவதாக இருக்கின்றன.

மான்சிங் கொல்லப்பட்டதும், அந்தச் செய்தி மறுகணமே நேரு; உத்தரப் பிரதேச முதல் மந்திரி சம்பூர்ணானந்த்; உள்நாட்டு மந்திரி பந்த்; காங்கிரஸ் தலைவர் தேபர்—ஆகிய இத்தனை பேருக்கும் டெலிபோன் மூலம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அது மட்டுமா? மாண்ட செய்தியைச் சொல்வதற்கு அந்த மாநிலத்து அமைச்சர் ஒரு பத்திரிகை நிருபர்கள் மாநாட்டையே கூட்டியிருக்கிறார்!

கொல்லப் பட்டதோ வெகு நாட்களாக தேடப்பட்ட ஒரு குற்றவாளி-வெறி நாயினும் கேவலமான நடத்தைகள் கொண்டவன்-சழக்கர் தலைவன்—அவன் சாவுக்கு இவ்வளவு 'மதிப்பு' (?) தரப்பட வேண்டியதின் அவசியம்தான் என்ன?

அன்று ஆவடி மாநாடு கூட்டிவிட்டு, சுடச்சுட சோஷலிசத் தீர்மானத்தைச் சமைத்து, பத்திரிகை நிருபர்களை அழைத்துப் பறிமாறினார்கள்—இப்போதோ மனித குல வைரி மறைந்ததற்கும் நிருபர்களை அழைத்துப் பேசியிருக்கிறார்கள்—பொறுத்தமாக இருக்கிறதா இந்த ஒற்றுமை? தேவைதானா அந்த செத்த பாம்பின் சாவுக்குக் காட்டப்பட்ட ஆர்வம்?

போர்க்கள நடவடிக்கைகளை உடனுக்குடன் உயர்தர ஆட்சியாளர்களுக்கு அறிவிக்கும் செய்திகளைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகஸ்ட் 15-ந் தேதியன்று கோவா நுழைந்த சத்யாக்கிரகிகளின் விவரம் பற்றியும், அங்கு அவர்களுக்கு நேர்ந்த விவேகமற்ற செயல் பற்றியும், பம்பாய் முதல்வர், நேருவுக்கு மணிக்குமணி டெலிபோன் மூலம் அறிவித்துக் கொண்டிருந்தாராம். அந்த அவசியம் மான்சிங்கின் சாவிற்கும் காட்டப்பட்டதன் நோக்கமென்ன?

—நெஞ்சு நோகிறது இந்த நேர்மையற்றோரின் ஆட்சி முறை கேட்டு!

நிருபர் மாநாடு; நேரு போன்ற தலைவர்களுக்கு நீட்டோலை—இவைகளோடு மட்டும் நின்றுவிடவில்லை, தேசியத்தார்கள் திருடன் ஒருவனைப் பிணமாகப் பிடித்த நிகழ்ச்சி! மான்சிங்கின் சவத்தை காட்சிக்கும் வைத்திருக்கிறார்கள்!

நாற்பதினாயிரம் மக்கள் அந்தக் 'கண் காட்சி'யிலே கலந்து கொண்டு மான்சிங்கின் பிரேதத்தைத் 'தரிசித்திருக்கிறார்கள்'!

மாவீரன் ஸ்டாலின் மறைந்தபோது அவனது பிணக்கோலத்தைப் பார்வையிட மைல் கணக்கிலே மக்கள் காத்திருந்தார்கள்.

—இங்கே மனிதருள் மிருகம் மான்சிங்கிற்கு இந்திய அரசினர் அமைத்த கண் காட்சியை நாற்பதினாயிரம் பேர் பார்த்திருக்கின்றனர்!

அண்ணல் காந்தியாரின் பிரேதமும் காட்சிக்கு வைக்கப்பட்டது-அவரது சீடர்களால் கயவனொருவனின் பிரேதமும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது!

கொல்லப்பட்டவனின் பிணம் அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டால், சொந்தக்காரர்கள் வசம் ஒப்புவித்தோ, அல்லது வேறுவகையிலோ அடக்கம் செய்யப்பட வேண்டியதுதான் சட்டப்படி அரசாங்கம் செய்யவேண்டிய நடவடிக்கை. அதைச் செய்யாமல் காட்சிக்கு வைத்த காட்டுமிராண்டியின் பிணத்துக்கு அவ்வளவு 'ஆர்ப்பாட்டங்களை' ஏன் நடத்தினார்கள்?

புலி வேட்டையாடியவன் அந்தப் புலியை காட்சிக்குவைப்பான். ஆனால் இந்த மான்சிங் புலியைப் பிடிக்க போலீஸ் புலிகள் ஒரு கோடி ரூபாயை அல்லவா பொதுமக்களது வரிப்பணத்திலிருந்து வாரியிறைத்திருக்கிறார்கள்! அந்த வெட்கக் கேட்டை விளம்பரப்படுத்திக் கொள்வதற்குத்தான் இலவசக் காட்சிக்கு ஏற்பாடு செய்தார்களா?

இல்லை; இல்லை. கொள்ளைக்காரனை கௌரவித்து கோழைமைக்குத் தீப ஆராதனை செய்கிறார்கள்! புல்லைச் செதுக்குவதுபோல் மனிதர்களின் தலைகளைச் செதுக்கி எறிந்தவன் — அந்த வெறிச் செயலுக்கு வெற்றிமாலை சூட்டுகிறார்கள்!

டெல்லி பத்திரிகை 'தாட்' எழுதியிருந்தது, 'மேல் நாடுகளிலே இத்தகைய பண்பாடுகள் உண்டா? திருடனைத் தொலைத்ததற்காக பத்திரிகைகள் நிருபர் மாநாடு நடத்துகிறார்களா? ஜாக் லெக்ஸ் டயமண்ட்—என்ற பிரபல கொள்ளைக்காரன் சுட்டுக் கொல்லப்பட்டபோதுகூட பத்திரிகைகளிலே செய்தி வந்ததைத் தவிர வேறு விசேஷங்கள் ஏதுமில்லையே'—என்று! அதையேதான் திருப்பிக் கேட்கிறோம்—பொல்லாதவனுக்குப் பெருமை அளிப்பதுதான் அகிம்சா தத்துவமா? காந்தி மார்க்கமா? பஞ்சசீலத் திட்டமா? அல்லது அசோகன் கண்ட அறவழியா? அயர்ந்து தூங்குகிறார்கள் மக்கள் என்று நினைத்திருக்கும் அண்ணல் காந்தியின் அடியார்களே—பதில் சொல்லுங்கள்.

★

## மாஸ்கோ மார்க்கம்!

மதம் மக்களுக்கு அபின்—பொதுவுடைமைத் தந்தை காரல் மார்க்ஸ் மக்களுக்குத் தந்த மாற்றுக் குறையாத் தங்கம் நிகர் தத்துவம் இது!

தந்தை காட்டிய திக்கிலே இன்று ரஷ்யா பீடு நடை போடுகிறது!

சமயப் பற்றை முறியடிக்கும் வகையில்—மதம் என்னும் பாசியை பாமரர் மனதிலிருந்து துடைத்துத் துப்புரவு செய்வதற்காக முப்பது புத்தகங்கள் எழுத வேண்டுமாம். அந்த ஒப்புயர்வற்ற நூல்களைத் தீட்டுவோருக்கு பதினைந்தாயிரம் ரூபிள்களை பரிசளிக்க ரஷ்ய கல்வி இலாக்காவினர் முன் வந்திருக்கின்றனர். 'ஜனரஞ்சகமான விஞ்ஞான' நாஸ்திகப் பிரசுரங்கள் மூன்றிற்கு இத்தகைய பரிசுகள் அளிக்கப்படும். தலா 7000 ரூபிள்களாக 6 பரிசுகளும், 5000 ரூபிள்களாக 10-பரிசுகளும் வேறு அறிவிக்கப் பட்டுள்ளது.

இது பொதுவுடைமைக் கொள்கைகளைத் திசையெட்டும் சேர்க்க விழையும் ரஷ்ய பூமியில்!

பச்சை நாத்திகம் தோகை விரித்தாடுகிறது, அங்கே!

இங்கு கம்யூனிஸ்ட் நண்பர்கள் என்ன செய்கிறார்கள்?

அவர்கள் நாஸ்திகத்தைப் பரப்ப வேண்டாம்; ஆஸ்திகத்துக்கு ஆதாரம் தேடாமலாவது இருக்கிறார்களா?

அதுவும் இல்லையே!

கம்பராமாயண மேடைகளிலே கம்யூனிஸ்ட் ஜீவாக்கள்!

செங்கொடியைக் கையிலேந்தி காளியம்மனுக்கு தீச்சட்டி எடுக்கிறார்கள்!

ரஷ்யப் பாதையிலே நடப்பவர்கள் இந்த விஷயத்திலே மட்டும் வேறு பாதை தேடுவானேன்? மதமென்னும் போதையை மக்களுக்கு அள்ளி அள்ளித் தருவானேன்?

பொதுவுடைமை நண்பர்களே—மாஸ்கோ மார்க்கத்தைப் பாருங்கள்! மயக்கம் தெளியப் பெறுங்கள்!

# துணி இருக்கிறது; தூரிகை இருக்கிறது-

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

''மாமல்லபுரத்துச் சிற்பங்கள் திராவிட பாணியை பறைசாற்று கின்றன பார்;பார்''என்று உணர்த்தத் தவறவில்லை நாம்!

அண்மையில் கல்லூரி ஒன்றில் பேசிய பிரெஞ்சுப் பேராசிரியர் சொல்லியிருக்கிறார், 'ஐரோப்பாவிலே வாழும் மக்கள்—வெள்ளையர்கள்—இந்திய இலக்கியங்கள் பற்றி தெரிந்து கொண்டார்கள் என்றால், அது திராவிட நாகரிகத்தின் மூலம் தான்—தமிழ், மலையாளம் பேசும் மக்களின் மூலம்தான்' என்று!

ஏன், சங்கராச்சாரியாருங்கூட எந்த ஒரு அறிக்கை வெளியிடும் போதும் 'திராவிட மொழி' என்பதைக் குறிப்பிடத் தவறியதில்லையே!

சங்கராச்சாரியார் முதல் சரித்திரப் பேராசிரியர்கள் வரை ஒத்துக் கொண்டதுதான் 'திராவிடம்' என்ற சொல்—என்று எடுத்துக் காட்டினோம்.

இப்படி நாம் ஆதாரங்களைக் கொட்டியபிறகு, மீண்டும் புதுக் கேள்வியைக் கிளப்பினர்கள், ''திராவிடம் தனித்து வாழ பலம் வேண்டாமா? — ராணுவ பலம் வேண்டாமா?'' என்று!

'நேரு படையெடுத்து வந்தால்—பாக்கிஸ்தான் போர்க் கோலம் பூண்டு வந்தால் — பர்மா படை பெருக்கி பாய்ந்தால் – கொத்தலவாலை போர்க்குரல் கொடுத்தால் – அல்லது ரஷ்யாவேதான் களம் அமைக்கத்துணிந்தால் என்னசெய்வீர்கள்? என்ன செய்யமுடியும்? எதிர்த்து நிற்க ஏது பலம்?' என்று கேட்டார்கள்! சரியான கேள்வி தான்!

மற்றவர்கள் வருவது இருக்கட்டும்; முதலில் நேரு திராவிட நாட்டில் படையெடுத்து வர முடியுமா? குண்டுமணி அளவுள்ள கோவாவுக்குள் நுழைய முடியவில்லையே, அவரால்! திராவிடத்தில் புகுந்துவிட முடியுமா?

1510-ம்ஆண்டு பீஜப்பூர் மாகாணத்திலே கோவா எனும் பகுதியை தனது வாய்க்குள்ளே சுருட்டிப் போட்டுக் கொண்டு, ஆதிபத்யக் குரல் கொடுத்து வருகிறது போர்ச்சுகல்.

அந்த கடுகத்தனை நாட்டை, கனல் கக்கும் கண்களோடு காப்பாற்றி வருகிறது இன்றுவரை, 'யார் நேருவா? — நெருங்காதே!' என்ற அதிகாரத் தொனியோடு — தர்பார் மிடுக்கோடு—பீரங்கி முழக்கத்தோடு!

'அசைக்க முடியாது என்னை' என்று ஆர்ப்பரிக்கிறார் சலாசர்!

சமர் செய்ய முடியாத நேரு சமாதானம் பேசுகிறார்! அந்த கோவாவிற்குள் நுழைய முடியாத நேரு, திராவிடத்தின்மேல் படையெடுத்தால்—தனி நாட்டுக்கு உதவத் தயாராக இருக்கும் பாக்கிஸ்தானே, இலங்கையோ, ரஷ்யாவோ, திராவிடத்திற்கு உதவி செய்ய முன்வராமலா போகும்?

'பலம் மட்டுமிருந்தால் போதுமா? வசதிகள் வேண்டாமா? வளமுண்டா இங்கே?'—இப்படியும் கேட்கிறார்கள். தென்னகத்து வளங்களை உணரமுடியாத இந்த 'திருதராஷ்டிரர்'களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன்:

திராவிடம் எவ்வளவு கொடிய கஷ்டங்களுக்கு ஆளாக நேர்ந்தாலும் தனித்து நின்று வாழ இயலும். நேரு துரைமகனார் எழுதிய உலக சரித்திரத்திலே தான் 1600 முதல் 1800-ம் ஆண்டுவரையில் ஜப்பான்நாடு, தன்னைத்தானே பூட்டி சீல் வைத்துக் கொண்டு, வெளியேயிருந்து யாரும் உள்ளே நுழையக் கூடாது--உள்ளேயிருந்து யாரும் வெளியே போகக்கூடாது-என்று இருநூறு வருடகாலம் தனித்து, தாள் போட்டுக் கொண்டு வாழ்ந்திருக்கிறது என்ற உண்மை காணக் கிடைக்கிறது. அருகாமையிலேயுள்ள சீனு, கொரியா முதலிய தேசங்களுடன்கூடதொடர்பு கொள்ளாமல் — போக்குவரத்து, வாணிபம், அனைவற்றிலும் உலகத்தோடு உள்ள தொடர்பைக் கத்தரித்துக் கொண்டு ஜப்பான் வாழ்ந்திருக்கிறது—இருநூறுவருட காலம்! திராவிடம் வாழமுடியாதா? — உலகத் தொடர்புகளை அறுத்துக் கொண்டு அல்ல;— பெருக்கிக் கொண்டு!

## ஓவியம் வரைவோம்!

இவ்வளவும் சொன்ன பிறகு தான், இப்போது நமது எதிரிகள், ஒருபுதிய விஷயத்தைக் கண்டு பிடித்து பூரித்துப் போகிறார்கள்.

'இவர்களிலேயே – தி. மு. க— தி. க. சண்டை ஓய்ந்தபாடில்லை. ஒருகொள்கை; இரு கட்சி! இவர்களுக்கு எப்படியப்பா திராவிட நாடு கிடைக்கும்?'—இதுபோலவும் கேட்கின்றனர்; கேலியாக!

அவர்களுக்கு நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன், இதோ நான் பேசுகிறேனே, இந்தக் கோகலே மன்றம்—இந்தப் பெயருக்குரிய கோபால கிருஷ்ண கோகலே மராட்டிய மண்டலத்தில் பிறந்த காங்கிரஸ் தூண்!— ஆனால் மிதவாதி! காங்கிரசிலே இன்னொரு பிரிவு தீவிரவாதிகள்! அவர்களின் தலைவர் லோகமான்ய பால கங்காதர திலகர். இந்த இரு காங்கிரஸ் தூண்களும் 1907-ம் ஆண்டு மோதிக் கொண்டு, காங்கிரசே இரண்டாகப் பிரிந்து போயிற்று. திலகர் கோஷ்டியினர் காங்கிரசிலிருந்து விரட்டப்பட்டனர். ஆம்; நமது மொழியிலே சொன்னால், தீவிரவாதிகள், மிதவாதிகளிடமிருந்து வெளியேறினர். தீவிரவாதிகளான திலகர் முதலியோர் வெளியேறிய பிறகு, அவர்கள் எல்லாம் ஆங்கில அரசை எதிர்த்து சிறை புகுந்தபோது, மிதவாதிகளான கோகலே குழுவினர், 1908-ம் ஆண்டு ஆங்கிலேய சர்க்காரை வெளிப்படையாக ஆதரித்து, மிண்டோ மார்லி சீர்திருத்தத்தையும் பாராட்டிப் புகழ்ந்தனர்.

பிறகு, என்ன ஆயிற்று?

மீண்டும் திலகர் கை வலுத்தது. கோகலேயின் மிதவாதம் மதிப்பிழந்து போயிற்று; இரு கட்சியினிடையே சச்சரவு ஓயவில்லை.

எனினும், இன்று வெள்ளைக்காரர்கள் வெளியேறிவிட்டார்கள் என்ற நிலை பிறந்திருக்கிறது. இரண்டாகப் பிரிந்து மோதிக் கொண்டிருந்த காங்கிரஸ்காரர்கள் தான் சுதந்திரக் கொடியை பறக்க விட்டுக் கொண்டிருக்கிறார்கள் இன்று! அவர்கள்தான் சொல்லுகிறார்கள் நம்மைப் பார்த்து; 'இவர்கள் இரண்டாகிவிட்டார்கள்; இனிமேல் திராவிடம் கனவு தான்' என்று!

இரண்டல்ல, மூன்றாகப் பிரிந்தாலும்—மூல முழக்கத்திலே மூளி ஏற்படாது என்பதை அவர்கள் உணர வேண்டுகிறேன். இரண்டுபடுத்திப் பேசுதல் – இழிவுரை கூறல்—'இதுகளால் ஆகாது' என இடித்துக் காட்டல் – அடித்து விரட்டல் எதுவுமே திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாதையைத் தடை செய்தது கிடையாது!

சைனாவிலே கிட்டான் என்னும் மாவட்டத்து உட்பகுதிகளிலே ஒரு மணமுறை உண்டு. மணமகள், பிச்சைக்காரி கட்டியிருக்கும் கந்தலாடையை வாங்கி உடுத்திக்கொண்டுதான் மாப்பிள்ளை வீட்டுக்குப் போகவேண்டும். மணமகளை, சித்தப்பன் தோளிலே தூக்கிப் போவான். அப்போது அந்தப் பெண்ணின் முதுகிலே, அவளது உறவினர் பெரிய கம்புகள் கொண்டு அடிப்பார்கள். அதை அவள் தாங்கிக் கொள்ள வேண்டும். முதுகு புண்ணாகி விடாமல் பஞ்சு மெத்தை போன்ற ஆடைகளை முதுகிலே கட்டிக் கொள்வார்கள் மணப்பெண்கள்! தாயார் வீட்டிலிருந்து வரும் எந்தப் பெண்ணும் அழாமல் வரக்கூடாது-கட்டாயம் கண்ணீர் விட்டுத் தீரவேண்டும். இவ்வளவு சங்கடங்கள், புது வாழ்வு காணப் போகும் ஒரு பெண்ணுக்கு உண்டு சைனாவிலே!

இத்தனை சங்கடங்களும், புது இயக்கம் கண்ட நமக்கும் உண்டு திராவிடத்திலே! புருஷன் வீட்டுக்குப் போகிற பெண் கண்ணீர்விட வேண்டும் கட்டாயமாக! நாமும் அப்படித்தான்—கண்ணீர் விட்டுத் தான் தாயார் வீட்டிலிருந்து கிளம்பினோம்—மணமகளின் முதுகிலே சொந்தக்காரர்கள் அடிப்பார்கள் சீனாவிலே!

இங்கென்ன வாழ்கிறது? இங்கும் சொந்தக்காரர்கள்தான் நம்மை அடிக்கிறார்கள்; வதைக்கிறார்கள்! முதுகு நொறுங்காமல் இருக்க மணமகளுக்கு கனத்த பஞ்சுமெத்தை ஆடை தேவைப் படுகிறது. நமக்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கனத்த ஆடை தேவைப்படுகிறது! கட்டிக்கொண்டு, புது வாழ்வு தேடப் புறப்படுகிறோம் — இந்த திராவிட சமுதாயத்துக்கு!

புது வாழ்வு கோரி விடுதலைக் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கிற நமக்கு ஊக்கமளிக்கும் தன்மையிலேதான், உலகிலே பல பகுதிகளிலே விடுதலைக்கான போர்க் கொடிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன.

மொராக்கோ!— ஆப்பிரிக்காவிலுள்ள பிரெஞ்சுக் காலனி. அது விடுதலைக் கோருகிறது. ஆயிரக்கணக்கான வெள்ளையர் பிணமாகிற அளவுக்கு புரட்சி நடைபெறுகிறது அங்கே!

ஆரேபியர்கள் மிகுதியாக உள்ள அல்ஜீரியா! அதுவும் பிரஞ்சுக் காலனி! அல்ஜீரியா பிரஞ்சு பார்லிமெண்டுக்குத் தன் பிரதிநிதியை அனுப்புகிறது; அதனால் அது பிரஞ்சுக் காலனியைச் சேர்ந்தது தான்-என பிரான்சு வாதிடுகிறது. அல்ஜீரியா கேட்கவில்லை! விடுதலை முரசை வேகமாகத் தட்டி, அராபிய மக்களின் அணியைத் திரட்டி நிற்கிறது!

மலேயா! பக்கத்திலே உள்ள நாடு! அங்கே இளவரசர் அப்துல் ரஹ்மான் என்பவர் இன்றைய தினம் விடுதலைப் போராட்டத்தின் தலைவராம். மலேயா பிரிட்டிஷ் காலனி ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட வேண்டும் என்றும் —நான்கே ஆண்டுகளில் சுதந்திரம் வேண்டும் என்றும் — போர்க் கொடி உயர்த்தியிருக்கிறார். சட்டசபைக்கு பிரிட்டிஷ் காலனி ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி வந்தாராம். வந்த நேரத்திலே, 'காலனி ஏகாதிபத்தியம் ஒழிக!' என்று கூச்சலிட்டாராம். அது மாத்திரமல்ல; 'உங்கள் லாபம்—எங்கள் இரத்தம்!' என்றும் கூறியிருக்கிறார்!

அடுத்தபடியாக சிங்கப்பூர்! அதுவும் பிரிட்டிஷ் காலனி நாடு தான். அங்கே மார்ஷல் டேவிட் என்கிற ஒரு தலைவர். அந்த மார்ஷல் டேவிட் பிறவியிலே ஒரு யூதர்! சிங்கப்பூர் வந்தார். இன்றையதினம் விடுதலை விரும்பிகளின் தலைவனாக வாழ்கிறார். சட்டசபையிலே தீர்மானமே போட்டுவிட்டார், சிங்கப்பூருக்கு சுதந்திரம் வேண்டுமென்று!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

## கொடி காக்க.....

*கலிங்கத்துப் போர்முனை கண்டான் களப்பல கண்ட அசோகன். இரத்த வெள்ளம் கண்டான். களத்திலே கணவனை இழந்து கண்ணீர் விட்டுக் கதறிய விதவைக் கோல மங்கையரைக்கண்டான்—மக்களை இழந்து தடுமாறிய மாதாக்களைக் கண்டான்—''அப்பா; அப்பா!'' என்று ஓலமிட்ட குழந்தைகளைக் கண்டான். என்ன செய்தான்? ''இனி மேல் போர் செய்யேன்'' என்று வாளை வீசி எறிந்தான்.*

*அந்த அசோகனின் சின்னத்தை கொடியிலே பொறித்துக் கொண்டுதான் வெட்கமில்லாமல் பேசுகிறார் நேரு, ''பத்தாயிரம் பேர் பிணமானாலும் கவலையில்லை; கொடியைக் காப்பேன்'' என்று!—*

— (கோகலே மன்றத்தில் மு. க.)

# கேரளத்துக் கட்டபொம்மன்

சுதந்திரம் இல்லை எனில் சாவதே மேல் என்று நினைத்து வேலும், கேடயமுமாய் உலவியோர் தெக்கணத்திலே பலருண்டு.

'அத்தான்' என்று அழைத்த முத்து கோர்த்த பல் வரிசையாளுக்குக் கடைசி முத்தம் அளித்துவிட்டு களம் நோக்கி நடை முடுக்குவோர் — இந்த நிலம் சொந்தமாகும் வரை வீட்டாரை, பெற்று வளர்த்த சுற்றத்தாரை, திரும்பிப் பார்க்க நேரமில்லாமல் தினவுகொண்ட தோளினராய் இலட்சியக்கனவு கண்டு காலம் கழிப்போர் தென்னகத்திலே ஏராளம்!

விந்தியத்துக்கு வடக்கே வீராங்கனை ஜான்சி ராணி; தெற்கே தமிழகத்தில் தன்னிகரில்லாக் கட்டபொம்மன்— ஆங்கிலேயரை சரியான அமைப்புமுறை ஏதுமில்லாமல் எதிர்த்தவர்கள் இவர்கள் இருவர் என்று மட்டும் எண்ண வேண்டாம்.

கேரளக் கரையிலும் ஒரு கட்டபொம்மன் வெள்ளைப் பரங்கியரை எதிர்த்து வாள் சுழற்றினான்!

**வேலுத் தம்பி** – என்று பெயர். சிலகாலம் திருவாங்கூரின் திவானாகப் பணியாற்றினான்.

வேலுத் தம்பி சாமான்யன்தான் — ஜரிகைக் குல்லாய் தரித்த பரம்பரையிலே உதித்தவனல்ல! அந்த ஆற்றல் மிகு வீரன் அரசுகட்டில் ஏறியதே ஒரு வீர காவியம்!

அப்போது பலராமவர்மா தான் திருவாங்கூர் பூமிக்குக் காவலர். அந்தச் செங்கோல் ஏந்தியை **ஐயந்தன் நம்பூதிரி** என்னும் பூணூல் ஏந்தி அடிமைப்படுத்தி வைத்திருந்தான்.

வர்மாவின் கையிலே வஜ்ராயுதம் உண்டு; வரிசை வரிசையாய் வீரர் பட்டாளம் உண்டு. ஆனாலும் அந்த அலைகடல் போன்ற அணிவகுப்பு நம்பூதிரியின் முன்னாலே சிறு துரும்பு!

வெள்ளாட்டின் முன்னே வேங்கை நாட்டியமாடுகிறது. மாமலை மண்மேட்டின் உத்திரவுக்குக் காத்திருக்கிறது— தம்பியால் இந்தக் கொடுமையைத் தாங்க முடியவில்லை.

1800-ம் ஆண்டு. காலை இளங் கதிரவன் கிழக்கு கிழித்துப் புறப்படும் நேரம். வர்மாவின் அரண்மனைக்கு முன்னே ஆயிரத்து எண்ணூறு வீரர்கள் அணிவகுத்து நின்றனர். அவர்களுக்குத் தலைவனாக தம்பி நின்றான்.

நல்ல பாம்பாம் நம்பூதிரியை விலக்க வேண்டும்; அவன்கூட இருக்கும் கொடியவர் கூட்டத்துக்கு தகுந்த தண்டனை தர வேண்டும்—கொக்கரித்தது தம்பியின் பட்டாளம்!

இங்கிலாந்திலே மன்னனை மருட்டி மாக்னா கார்டாவிலே கையொப்பம் வாங்கினார்களே, அதுபோன்ற நிலைமை திருவனந்தைக் காவலனைச் சூழ்ந்து கொண்டது.

வர்மா பணிந்தான்—தம்பி ஜெயபேரிகை தட்டினான்! நயவஞ்சக நம்பூதிரி விரட்டப்பட்டான்!

—இந்த சந்தர்ப்பங்கள்தான் தம்பியை திருவாங்கூர்த் திவானாக்கியது!

1805-ம் ஆண்டு—அப்போது கிழக்கிந்தியாக் கம்பெனியார் கட்டாயப்படுத்தி மகாராஜா வர்மாவுடன் ஒரு நேச உடன்படிக்கையைச் செய்து கொண்டார்கள். கர்னல் கோலின் மக்காலே என்னும் வெள்ளைத் துரை சமயம் பார்த்து சுரண்டல் இயந்திரத்தைச் சுற்றவிட்டான்.

ஆண்டாண்டு தோறும் வெள்ளிப் பணங்கள் கம்பெனியாரின் கஜானாவை நிரப்பியது. அரசனே ஆண்டியாகும் நிலையை அடைந்துவிட்டான்.

உடமைக்காரனை உறிஞ்சுகிற விதத்தில்தான் அட்டையையும் மிஞ்சிவிடுவானே, ஆதிபத்யக்காரன்! திவானால் வரிகொடுக்க முடியவில்லை. தேசமோ கம்பெனிக்காரரிடம் கடன்பட்டு விட்டது!

மக்காலே கண்டிப்புக்காரன். திவானாக இருக்கும் தம்பியின் முயற்சியினால்தான் வரிப்பணம் தனக்கு வரவில்லையென்று நினைத்தான்.

உடனே தம்பியை திவான் பதவியிலிருந்து விலக்க வேண்டும்-என்று மக்காலே மகாராஜாவுக்கு உத்தரவு போட்டான்.

அருகம்புல் ஆலமரத்துக்கு ஆணையிட்டது அடங்கிப் பணியும்படி! ஆலமரமாயிருந்தாலென்ன—தனித்து வாழும் உணர்வாம் ஆணிவேர்இல்லாதபோது அதுவும் முடி தாழ வேண்டியதுதானே!

வர்மா கவர்னர் ஜெனரலுக்கு எழுதிக் கேட்டார் — அவரோ மெக்காலேயின் வாக்குதான் வேத வாக்கு என்று சொல்லி விட்டார்.

முடிவு? ஐநூறுரூபாய் பென்ஷனோடு தம்பி விலக்கப்பட்டான்.

உரிமைப் போர் வீரனை உபகாரச் சம்பளம் என்னும் கைக்கூலி தடுத்து நிறுத்திவிட முடியுமா? தம்பி தணலானான். வெள்ளைத் துரைகளைப்பொசுக்கிட கங்கணம் கட்டினான்.

அப்போது கொச்சியின் பிரதமராயிருந்த அச்சன், தம்பியின் திட்டத்துக்கு துணை செய்வதாக வாக்கு தந்தார். இருவருமாகச் சேர்ந்து மக்காலே துரையை மயானத்துக்கு அனுப்ப முடிவு செய்தார்கள்.

கொச்சியிலே இருக்கும் மக்காலே துரைக்கு பாதுகாப்பாக மாபெரும் சைன்யமொன்று நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அந்த அணியைப் பிளந்து அவனை எப்படி அணுக முடியும்?

—தம்பி யோசித்தான். உடனே, தான் கோழிக் கோட்டிற்குச் சென்று ஓய்வுபெறப் போவதாகவும், தனக்கு பாதுகாப்பளிக்க சேனையொன்று வேண்டுமென்றும், துரைக்கு எழுதினான்.

தம்பி தொலைந்தால் போதுமென்று நினைத்து, துரையும் அவனுக்கு கர்னல் டாலேயின் தலைமையில் பல வீரர்களை அனுப்பினான்.

தம்பியின் திட்டம் நிறைவேறிவிட்டது. டாலேயும் அவன் வீரர்களும் கோழிக் கோட்டிற்கு வருவார்கள். அதனால் அங்கே மக்காலே மாளிகையைச் சுற்றியிருக்கும் பட்டாளம் பாதியாகி விடும் —இதுதான் தம்பியின் கருத்து!

முன்னேற்பாட்டின் படியே கொச்சி திவானின் ஆட்கள் மக்காலே வீட்டிற்குள் நுழைந்தனர். ஆள் அரவம் கண்டு அந்த வெள்ளைப் பரங்கி பலகணி வழியே தலையை நீட்டினான். அவன் சிரசைப் பார்த்து துப்பாக்கி வேட்டு ஒன்று அதிர்ந்தது.

அந்தோ பரிதாபம்! குறி தவறிவிட்டது. உயிருக்குப் பயந்த மக்காலே பாதாளப் பாதை வழியாக தப்பி, கொச்சி துறைமுகத்திலே இருந்த கப்பலுக்கு ஓடிவிட்டான்!

வேல் பாய்ந்த வேழம்போல் தம்பி ஆவேசமடைந்தான். 'ஆங்கிலேயர் ஓடும் வரையில் இந்த நாடும், நாகரிகமும், கலையும், வாழ்வும் நாசமாகிவிடும்'— என்று அறிவிப்பு விடுத்து இறுதிப் போராட்டத்துக்குத் துவக்கம் செய்தான்!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்



**வேலுத் தம்பி**—வீரத்தின் சிகரம்-விடுதலைத் தாயின் மணியாரம் — வெள்ளையர் கூட்டத்தைத் தனித்து நின்று எதிர்த்த காளை—தேரைகளின் பிரதிநிதியாக இருந்து பாம்புக் கூட்டத்தின் முன்னே படை கொண்டு சென்ற தீரன்......

# புதையல்

மு. கருணாநிதி

சென்ற இதழில்....

[அம்பலத்தின் மனைவி மேனகா, தன் இளமைக்கு விருந்தாக துரை கிடைப்பானே என ஏங்கி நிற்கிருள். அம்பலமோ, புதையல் ரகசியத்தை துரையிடமிருந்து எவ்வழியில் கிரகிப்பது என்று தெரியாமல் திண்டாடுகிருர். குடுகுடுப்பைக்காரனின் குரல கேட்கிறது. அவனது 'அளப்பு'களிலே மயங்குகிருர். அவனை உள்ளே அழைக்கிருர்.]

**39**

## மலையாள - - பகவதி!

குடு குடுப்பைக்காரன் சிரித்த முகத்தோடு உள்ளே வந்து அம்பலம் குறிப்பிட்ட இடத்திலே உட்கார்ந்து கொண்டான்.

"ஏய், குடுகுடுப்பாண்டி—என்ன நல்லகாலம் வருதுன்னு சொல்றே? கொஞ்சம் விபரமாச் சொல்லேன்!"

"நான சொல்றேன்? சத்தி மாகாளி—பகவதி சொல்ரா! அய்யாவுக்கு அஷ்ட ஐஸ்வர்யமும்...... கிடைக்தும். அயயாவுக்கு கெடுதி நினேச்சவன் 'அய்யோ'ன்னு போருன். 'அய்யோ'ன்னு போருன்."

"ஏய், சத்தம் போடாதேப்பா! கேக்கிறத்துக்கு பதில் சொல்லு!... அய்யா, ஒரு காரியத்துக்காக கஷ்டப்படுராருன்னு சொன்னியே; அது என்ன காரியம்? சொல்லு பார்ப்போம்!"

"விடியக் காலையிலே கூடச் சொன்னேனன் — அய்யா மெனக்கெடும் காரியம் காயா பழமான்னு அய்யா கவலைப் படுராரு—கவலைப் பட வேண்டியதில்லே—பூமியைப் பொறுத்த விஷயம்—அதுக்காகத்தான் அய்யா சிரமப் படுராரு. சிரம மில்லாம ஜெபமாகப் போகுது' காரியம் ஜெயமாகப்போகுது!"

"ஜெயம் இருக்கட்டும்; காரியத்துப் பேரைச் சொல்லேன். பூமியைப் பொறுத்த விஷயம்ன என்ன?"

"பகவதி, சுருக்கமாத்தான் சொல்லுவா! அவ்வளவு விபரமா சொல்ல மாட்டா! பூமியைப் பொறுத்த விஷயம்—மண்ணைப் பொறுத்த விஷயம்!"

"அப்படின்ன; நிலம் வாங்குவேன?"

"ஆமாம்—வயல் வாங்குவார் அய்யா—பொன் வயல் வாங்குவாரு! சந்தோஷமா வாங்குவாரு! —சாயபுக்கு ஒரு கிழிஞ்ச துணி, பாவாடை, ஏதாவது கொடுங்கிருன். மகராசா மாதிரி யிருக்காரு!"



"பொன்வயல் வாங்குவேன? ஏய்...வாங்குவேன? கிடைக்குமா? அதைச் சொல்லு!"

"கிடைக்கும்னு சொல்ரா, பகவதி! விடியக்காலேகூட சொன்னேன், இந்த விட்டுக்கு 'லக்ஷ்மி' வரப்போருன்னு!"

"பூமியிலேயிருந்து என்னப்பா கிடைக்கும்? புதையலா?"

"பொன்னைப் பொறுத்த விஷயந்தான் கிடைக்கும்னு சொல்ரா பகவதி! அதுவும் சிக்கிரம் கிடைக்கும்னு சொல்ரா!"

"அப்படியா?"

"அய்யா ஒரு இடத்திலே நம்பிக்கை வச்சு அலையிராரு!—அந்த இடத்திலே அய்யாவுக்கு ஜெயமாகாது! அய்யாவுக்கு ஜெயமாகப் போற எடம் வேறன்னு சொல்ரு பகவதி!"

"எந்த இடம்? எந்த இடம்?"

"அய்யா முயற்சி பண்ற காரியத்துக்கு. இன்னொரு மூதேவி மனுஷன் முயற்சி பண்ணப் போருன். சரியான சமயத்திலே அவன் மாட்டப் போருன்!"

"மாட்டப் போருன? மாட்டிகிட்டான்!"

"அய்யா சொல்ற மனுஷனல்ல சாயபு சொல்ற மனுஷன் — சாயபு சொல்ற மனுஷன்— சாகிற வயசு உள்ள சண்டாளன்! அவன் அய்யோன்னு போகப் போருன், அம்மா பகவதி சொல்ரு! விடியக்காலேகூட சாயபு சொன்னன்—ஒரு கிழிஞ்ச துணி பாவாடை உங்கத் தங்கக் கையாலே, இந்தான்னு முகத்தில் வீசுங்க, மவராஜா!—நல்லகாலம் பொறக்குது!"

"எழுவானுக்குத் தொழுவானுக்கு இடையிலே...
காக்கை மூக்கு நிழலிலே...
கள்வர் புகும் வழியிலே...
கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
எழுபது கோடி பசும்பொன்... "

"சாகிற வயது உள்ளவன் எனக்கு துரோகம் நினேக்கிருன?— இந்தாப்பா சாயபு! கொஞ்சம் நிதானமா யோசனை பண்ணி சொல்லு! யார் அவன்?"

குடுகுடுப்பைக்காரன் சிறிது யோசித்துவிட்டு, பிறகு அம்பலத்தைப் பார்த்து மளமளவென்று பேச ஆரம்பித்தான்.

"யோசிச்சான் சாயபு! பகவதி சொல்ரா, ஒரு வயசான மனுஷன்-வஞ்சக மனுஷன்—அவனுகிட்ட தான் இருக்குது அய்யா தேடி அலையிற சொத்துன்னு! தோண்டி எடுக்கப் போருன்- ஆன, அது அவன் கையில் கிடைக்காமல், அய்யா கையில்தான் கிடைக்கும்னு பகவதி சொல்ரா!"

"இந்தா சாயபு-விபரமாகச் சொல்றேனே, இந்த ஊர்ல புதையல் இருக்குன்னு எல்லோரும் தேடி அலையிறங்க. எனக்குக் கூட கொஞ்சம் அதில் சபலந்தான். அது எனக்கு நிச்சயம் கிடைக்குமான்னு உன் பகவதியைக் கேட்டுப் பாரு!"

"கேட்டான்—கேட்டுட்டான். அய்யாவுக்கு பூமிதோண்டுற மந்திரம் தெரியிலே; தவிக்கிராருன்னு பகவதி சொல்ரா! அய்யா அதைப் பத்தி கவலேப்பட வேண்டியதில்லேங்கிருன் சாயபு! இன்னிக்கோ, நாளேக்கோ, நடுராத்திரியிலே—அய்யாவோட சொத்தை அபகரிக்கப் போருன் அந்த மூதேவிமனுஷன்!"

"ஆ! அப்படியா?"

"ஆமாங்கிரு பகவதி!"

"அய்யோ!"

"ஆன—அவன் அபகரிக்கிற நேரத்திலே அய்யாகிட்ட சிக்கப் போருன்னும் சொல்ரு பகவதி!"

"இன்றைக்கோ, நாளேக்கோ?... உண்மையாகவா?......புதையல் எடுக்க திட்டம்போட்டு விட்டார்களா?"

"ஆமாம்—இரண்டு பேரு சேர்ந்து எடுக்கிறதா முடிவு பண்ணிருங்கன்னு சொல்ரு பகவதி! அதுக்குள்ள ஒருத்தன் கண் காணம போயிட்டானும்—ஒருத்தன் மட்டும் எடுக்கப் போருனும்! பகவதி சொல்ரு—அய்யாவுக்கு அதிர்ஷ்டம் அடிக்குது! ஒரு கிழிஞ்ச துணி—பழசு, பட்டு, பாவாடை—உங்களோட தங்கக் கையாலே சாயபுக்கு கொடுக்கணுங்கிருன்."

குடு குடுப்பாண்டியின் இந்த வார்த்தைகள், அம்பலத்திற்கு புதிய தெம்பை உண்டாக்கின. அவன் சொல்வது மாயாண்டியைத் தானிருக்கும். மாயாண்டிக் கிழவன்தான் புதையலை எடுக்க முயற்சி பண்ணப் போகிறான். அந்த சமயம் பார்த்து அவனைப் பிடித்துவிட வேண்டும் என்று மனதுக்குள்ளே முடிவு செய்து கொண்டார்.

குடு குடுப்பைக்காரன் மேலும் தொடர்ந்தான் :

"அய்யர் நினைக்கிராரு; சாயபு சொல்றது சரியா இருக்குமான்னு! அய்யாவுக்கு ரெண்டே எதிரிதான் இருக்கான்! ஒருத்தன் ஜெயில்ல கிடக்கான்! ஒருத்தன் இன்னைக்கோ நாளைக்கோ சாவப்போறான்!'

"யாருப்பா சாகப் போறு?"

"அய்யா மனசு அப்பட்டமா தெரியுது! முதல் எழுத்து மாவன்னு உள்ள மனுஷன். அந்தப் பேர்வழியை அய்யா தொலைக்கப் போறாரு! ஆனு ஒண்ணு அய்யாவுக்கு சொல்லி வைக்கிறேன் சாயபு; அந்த வயசான மனுஷனை கொன்னு காரியம் ஜெயமா முடியாது! ஜெயமா முடியாது! ஜெயில்ல இருக்கிறவனையும் கொல்லக் கூடாதுங்கிறு பகவதி!"

"ஜெயில்ல யாரு இருக்கா?" என்று சந்தேகத்தோடு கேட்டார் அம்பலம்.

"ஜெயில்னு ஜெயிலே அல்ல!—அய்யாவுக்குக் கீழே அடங்கிக் கிடக்கிறான். அவனை விடக்கூடாதுங்கிறு பகவதி! விட்டா காரியம் கெட்டுடும்!"

"குடுகுடுப்பாண்டி! நீ மகா மேதாவியாயிருக்கிறே...மகா கெட்டிக்காரன்! என் மனசிலே உள்ளதை யெல்லாம் அப்படியே புட்டுப் புட்டு சொல்லிவிட்டாயே. ஆனு ஒண்ணு; உனக்குத்தான் மந்திர தந்திரம், மாயம், வசியம் எல்லா வேலையும் தெரியுமே—அதைக் கொண்டு ஒரு காரியம் செய்யேன் பார்ப்போம்!"

"அய்யா சொன்னு அட்டி ஏதுங்கிறன் சாயபு! ஒரு கிழிஞ்ச புடவை—கிழிஞ்ச வேட்டி—உடைஞ்ச செம்பு தவலை-ஓட்டை உடைசல் பாத்திரம் போதுங்கிறன். தங்கக் கையாலே......"

"சரி—சரி—வேணுங்கிறது தர்ரேன். நான் சொல்ற ஆளை இங்கதான் அடைச்சு வச்சிருக்கேன். அவனுகிட்ட வசிய மருந்து வேலை செய்து, எப்படியாவது அவனுகிட்டயிருந்து பெரிய உண்மையை நீ கிரகிக்கணும்!"

"அப்படியே சாயபு செய்வான். சந்தேகம் வேண்டாங்கிறு பகவதி. சுடுகாட்டு எலும்பு—இதோ இருக்கு! அய்யா, கவலைப்பட வேண்டாம். கர்ப்ப ஸ்த்ரீயோட மணிக்கட்டு எலும்பு இது! கல்லையும் கரைக்கலாம்—கடலையும் வற்ற வைக்கலாம் என்கிறள் பகவதி! "

"சரி-அப்படியானல் வா! வசியத்தை ஆரம்பி! ரகசியத்தை வாங்கித்தா! வா! வா!"

"ஆகூம்! சாயபு அப்படி வர மாட்டான். அந்தப் பாவியிருக்கிற இடத்திலே சாயபுவையும் கொண்டு போயி அடைச்சு போட்டது மாதிரி போடணுங்கிறள் மலையாள பகவதி! அவனோட சாயபுவும் ஒரு கைதி மாதிரி கிடப்பான்—வசிய வேலை நடக்கும். ரகசியத்தைக் கக்கி விடுவான்."

"ஆ! சபாஷ்! அப்படியே செய்கிறேன்" என்று குடுகுடுப்பைக்காரனை அழைத்துக் கொண்டு, அம்பலம் உள்ளே கிளம்பினர். அம்பலமும், குடுகுடுப்பாண்டியும் பேசிக் கொண்டிருக்கும்போது, இதுதான் சமயமென்று, மேனகா துரை பூட்டப்பட்டுள்ள அறையின் ஜன்னல் பக்கமாக தன் முகத்தைக்காட்ட ஆரம்பித்தாள்.

துரையோ, அவனைக் கவனிக்காதது போல கண்ணை மூடிக் கொண்டு தூங்கும் பாவனையில் படுத்திருந்தான்.

"என்ன தூக்கமா?"

பதில் இல்லை.

"சாப்பிட்ட களைப்பாக்கும்!"

அதற்கும் பதில் இல்லை.

துரையின் மீது ஒரு சிறு கல் விழுந்தது. விழித்துப் பார்த்தான். திரும்பி வேறு பக்கம் படுத்துக் கொண்டான்.

மேனகாவுக்கு நிற்க இயலவில்லை. கூண்டிலே இருப்பது துரையல்ல; தானே இருப்பதாக அவள் கற்பனை செய்து கொண்டாள். துரைக்கு ஏற்பட்டுள்ள வேதனையில் தன்னேடு பேசுவது போன்ற இன்ப நிகழ்ச்சிகளை அனுபவிக்கும் எண்ணம் பிறக்கவில்லைபோலும் என அவள் கருதினுள். அணை போட்டுத் தடுத்து வைத்திருந்த புதுவெள்ளம் பொங்கியெழுந்து, அணையைப் பிளந்தெறியத் துவங்கி விட்டது. அதன் எடுத்துக் காட்டாகத்தான் மேனகாவின் கண்களிலே புரட்சி வர்ணம் தோன்றியது.

"இப்படி வாருங்களேன்-ஒரு சேதி" என்றுள் மேனகா!

அவன் வரவில்லை. அந்த சமயம் அம்பலமும், குடுகுடுப்பாண்டியும் அங்கே வருவதைக் கண்டு, மேனகா மறைந்துவிட்டாள்.

அம்பலம் அறையின் கதவைத் திறந்து குடுகுடுப்பாண்டியை உள்ளே தள்ளுவதுபோல தள்ளிவிட்டார். அவனும் "அப்பா! அப்பா! சாமி, சாமி! என்னை விட்டுடுங்க மகராஜா!" என்று கத்தியபடி உள்ளே விழுந்தான். அம்பலம், குடுகுடுப்பாண்டி ஆகிய இருவரின் நடிப்பையும் உணர முடியாமல் துரை விழித்தான்.

"இரண்டு பயல்களும் இங்கேயே கிடக்கட்டும்!" என்று உறுமிக்கொண்டு அறையைப் பூட்டிக் கொண்டு நகர்ந்தான், அம்பலம்!

தூரத்திலிருந்தே இதைகவனித்த மேனகாவுக்கு கவலை தாங்கமுடியவில்லை. கோபமும் பிறந்துவிட்டது! துரையோடு, தான் தனித்துப் பேசி, தன் காதலை வெளியிட முடியாமல்,யாரோ ஒரு குடுகுடுப்பைக்காரனைக் கொண்டு வந்து வைத்து விட்டாரேயென்று அவள் குமுறினுள்.

துரை, குடுகுடுப்பாண்டியின் முகத்தை உற்றுப் பார்த்தான் எங்கேயோ பார்த்த முகத்தைப் போல இருந்ததோ என்னவோ அவனையே வெறிக்கப் பார்த்தான் குடுகுடுப்பாண்டி, துரையிடம் எதுவுமே பேசாமல், அறையில் ஒரு மூலையிலே போய் உட்கார்ந்து கொண்டான்.

துரை, அவனைப்பார்த்து "நீ யார்?" என்றான்.

அதற்கு பதில் சொல்லாமல் அவன், 'குடுகுடு'வென குடுகுடுப்பையை ஆட்டிக் காட்டினன்.

"யாரப்பா?" என்றுன் துரை சிறிது ஆத்திரமாக!

"நான் மலையாள பகவதி!" என்றுன் குடுகுடுப்பாண்டி!

மேனகா, ஜன்னல் பக்கமா ஒருமுறை வந்து பார்த்து விட்டு துரையின்மீது விழியை வீசிவிட்டு அகன்ருள். மேனகா வந்து போனதை, குடுகுடுப்பாண்டி கவனித்தான். அவன் கவனிப்பதை துரையும் கவனித்தான்.

[ வளரும்

‘முரசொலி’

அடுத்த இதழ்

திராவிட நாடு பிரிவினை நாள்

இதழாக வெளிவருகிறது.

# ★ மகாபாரதம் - [ சூதாட்ட படலம் ] - 17 ★



# புதுவழி காணும் பூசுரத் தலைவர்!

### பொன்முடியின் கடிதம்....

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

இங்கேதான் குமார் குழப்பம் கிளம்புகிறது.

பி. சி. ஜி. மருந்திலே சக்தி யில்லை; பயன் இல்லை—என்று கூறுவதற்கு ஆச்சாரியார் யார்?

மருத்துவ நூல் விற்பன்னரா? அல்லது க்ஷய நோயைப் பற்றி கரைகண்ட மேதையா? யார் இந்த ஆச்சாரியார்? மெடிக்கல் காலேஜில் மழைக்காகத் தவிர மற்றைய நேரங்களில் நுழைந்திருக்கிறாரா? ஒரு விஞ்ஞானச் சாதனையைப்பற்றிப் பேச இவருக்கு என்ன தகுதி இருக்கிறது?

—இதுதான் அவர்மீது நாலா பக்கங்களிலிருந்தும் மருத்துவ நூல் வல்லார்கள் தொடுத்திருக்கும் கணைகள்.

அவர் ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறார். 'நான் ஏன் பி. சி. ஜி.யை எதிர்க்கிறேன்?'—என்று! அதில்கூட ஆச்சாரியார், மேல்நாட்டு டாக்டர்கள் பி. சி. ஜி.யைப் பற்றி சந்தேகமாகக் கூறியவைகளை மட்டும் எடுத்து வெளியிட்டு, பி. சி. ஜி. வேண்டுமென்று கூறியதற்கான காரணங்களை நீக்கியிருக்கிறாராம்.

இப்படி எழுதுகிறது 'சுதந்திரா' இதழ்! எப்படி யிருக்கிறது பார்த்தாயா? இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல்—மவுண்ட் பாட்டன் உட்கார்ந்த ஆசனத்தை நிரப்பியவர் நாட்டிலே நடமாடவிடும் பண்பாடு இப்படியா இருக்க வேண்டும்! அவரா நடுத்தெரு நாராயணனாக மாறி ஒட்டு வேலைகள் செய்ய வேண்டும்? வெட்கம்! வெட்கம்!!

சுக்குக் கஷாயம் வைப்பது எப்படி என்று தெரியாது. ஆனால் இவரோ நிபுணர்கள் மட்டுமே பேசுவதற்கு யோக்யதையுடைய பி. சி. ஜி.யைப் பற்றி விமர்சனம் புரிய வந்துவிட்டார்!

எனக்குத் தெரிகிறது குமார் —நீ மீண்டும், மீண்டும் கேட்க வருகிறாய் — இப்படிச் செய்வதால் ஆச்சாரியாருக்கு என்ன லாபம்?—என்று!

லாபம் கொஞ்சமல்ல குமார்! நிறைய இருக்கிறது. லாபம் அவருக்கு மட்டுமல்ல; அவருடைய இனத்தாருக்கும் இருக்கிறது!

எப்படி என்கிறாயா? இதோ சொல்கிறேன். அறுசுவையுண்டியிலே விஷம் இருக்கிறது என்று ஒரு அநாமதேயம் சொன்னால்கூட அதை ஆண்டியும் தொடமாட்டான் — என்று ஒரு கதை சொன்னேனே, அதைப் போலவே இந்த 'அரசியல் அநாமதேயத்துப் பேச்சினால் நம் நாட்டுப் பாமரர்களிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. பி. சி. ஜி. பற்றி! நம் மக்களைப் பற்றி உனக்குத் தெரியாதா? அவர்கள்தான் 'ராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன'—என்று இருப்பவர்களாயிற்றே!

பி. சி. ஜி.யை விஷம் என்றால் எல்லோருக்கும் ஏன், உனக்கும், எனக்கும்கூட — அந்த மருந்தைக் கண்டதும் பயமாகத்தானே இருக்கிறது!

நீயும் நானும் க்ஷயத்தைத் தடுத்துக்கொள்ள வேறு வழிகளைத் தேடிக்கொள்வோம்.

ஆனால் ஏதுமறியாத இந் நாட்டுப் பாமர நண்பன் என்ன செய்வான்?

விஞ்ஞானம் வியாதியைத் தடுக்குமென்று நினைத்தான். அந்த நனவைக் கனவாக்கி விட்டார் மாஜி கவர்னர் ஜெனரல்-மாம்பலத்து வேதியர்!

இப்போது அவன் என்ன செய்வான்? மருத்துவரிடமா போவான்? ஆச்சாரியார் அவன் விஷம் தருவதாக அல்லவா பிரச்சாரம் செய்திருக்கிறார்! பிறகு, அவன் வியாதிதீர வேறு வழியே இல்லையா?

இருக்கிறது; இருக்கிறது; ஆச்சாரியார் திறந்துவிட்டிருக்கும் புதியவழி இருக்கிறது— க்ஷய வியாதியை டாக்டரோ, பி. சி. ஜி. யோ குணப்படுத்தாது; விபூதிதான் குணப்படுத்தும்!—இதுதான் ஆச்சாரியார் காட்ட விரும்பும் மார்க்கம்.

"டி. பி. யா? அய்யோ, பாவம், பி. சி. ஜி. யும் பலிக்கவில்லையாம். என்ன செய்வது! எல்லாம் விதிப்படிதான் நடக்கும். ஏதோ மகேஸ்வரன்இருக்கிறான். அவனுக்கு மண்டகப்படி செய்வதாக வேண்டிக்கொள்" — இந்த மாதிரியான பேச்சு நாட்டிலே கிளம்ப வேண்டுமென்பதற்காகத்தான் ஆச்சாரியார் இப்போது பிரச்சார பீரங்கியைத் திருப்பியிருக்கிறார்.

பாகவத பிரசங்கம் செய்தவர் பி. சி. ஜி. பற்றிப் பேசுகிறார்.

'உபநிஷதப் பலகணி' கண்டவர் பி. சி. ஜி.யின் உண்மைகளை ஆராய்கிறார்.

'கண்ணன் காட்டிய வழியிலே' நடந்தவர் க்ஷயக் கிருமிகளுக்கு எதிரான பாதையிலே ஓடுவதுபோல் பாசாங்கு செய்கிறார்.

ஏன்?

அங்கும் அவருடைய கொள்கைக்கு - ஆண்டாண்டு காலமாக நம்மை அடிமைப்படுத்தியிருக்கும் சனாதனக் கொள்கைக்கு - அபரிமிதமான வெற்றி கிடைக்கிறது! கீதாபோதேசம் செய்வதை விட பி. சி. ஜி. பற்றி பீதி கிளப்பிவிட்டால் பகவானைப் பற்றிய நினைவு பாமரனிடத்திலே இன்னும் அதிகமான அளவுக்கே உதயமாகிறது.

பி. சி. ஜி. யையும் பாகவதமாக்கிவிட்டார், ஆச்சாரியார்!

அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் தங்கள் இனத்தை வாழவைக்க வேண்டுமென்ற அக்கறை யல்லவா இருக்கிறது! அது நம்மவர்களிடம் இருப்பதில்லையே; என்ன செய்வது?

அன்புள்ள,
பொன்முடி.




### நல்ல தீர்ப்பு-நைஜாமுக்கு!

தாம்பரம்
1—9—55

நைஜாமினுடைய நாலு கோடி ரூபாய் நோட்டுகள் எலிகளின் பற்களுக்குப் பலியாயின. இழந்த பணத்தை மீட்டுத்தர அரசாங்கம் மறுத்து விட்டது என்பது முதல் தேதியின் செய்தி.

பொது நலத்திற்குப் பயன் படாத நாலு கோடி என்ன; நானூறு கோடி அழிவதாக யிருந்தாலும் வரவேற்கத் தகுந்ததே. பதுக்கி வாழ்வதின் பலன்—அளவுக்கு மிஞ்சி சேர்த்து வைப்போர் அடையும் பரிசு! பிறர் உழைப்பைத் திருடி, பதுக்கி வாழும் பண்புடையது எலிதான். இத்துறையில் மனிதன் தன்னை மிஞ்சி விட்டான் என்று எலிகளுக்குக் கோபம் போலும்!

அன்பன்,
சாமிதாசன்.

★

### இயக்கம் வளர்கிறது!

சிவகாசி
1—9—55

இன்று இந்தியாபூராவும் கோவா படுகொலையை எதிர்த்து கண்டனக் கூட்டங்களும், கடையடைப்புகளும் நடந்துகொண்டிருக்கிறது. சர்வ கட்சிகளும் சேர்ந்து கண்டனக் கூட்டங்கள் நடத்துகின்றன. இந்த சர்வ கட்சி கூட்டங்களிலும் அதிகமாக பங்கெடுத்துக்கொண்டு ஒற்றுமையோடு முன்னின்று நடத்துவது நமது இயக்கத் தோழர்கள்தான். அதைப் பார்த்த ஆளும் கட்சியினரும், மாற்றுக்கட்சித் தோழர்களும் நம்மீது பொறாமை கொண்டு ஏசல் கணைகளை ஏவுகின்றனர்.

சென்னையில் நடந்த கோவா கண்டனக் கூட்டத்தில் நம் இயக்கத் தோழர்கள் பெரும் பங்கெடுத்துக் கொண்டதைப்பார்த்த ஜீவா அவர்கள், அக் கூட்டத்திலும் தம் ஏசல் கணைகளை வீசினர். அதேபோல் சிவகாசியில் கோவா கண்டனக் கூட்டத்தில் தி.மு.க. கொடியுடன் நம் இயக்கத் தோழர்கள் ஊர்வலம் முழுவதும் காட்சியளித்தார்கள். அதற்கு வேண்டிய முயற்சியையும் நம் இயக்கத் தோழர்கள்தான் ஏற்று நடத்தி வந்தனர். இதைப் பார்த்த ஆளுங் கட்சியினர் பொறாமை கொண்டு, தோழர் அருப்புக் கோட்டை எம். எஸ். ராமசாமி அவர்கள் பேசும்போது இடையே நிறுத்திவிடும்படி அவரைக் கண்டித்தனர். தோழர் ராமசாமி அவர்கள் பேசும்போது "ஆதியில் போர்த்துக்கீசியர் வந்து குடியேறும்போது இந்தியாவிலுள்ள மக்கள், மதம், ஜாதி, மூடப் பழக்கவழக்கங்களில் ஆழ்ந்து கிடந்தார்கள். ஆகையால்தான் அவர்கள் நாடு பிடிக்கத் தோதுவாய் இருந்தது" என்று கூறினார். உடனே மேடையிலிருக்கும் அஹிம்சா மூர்த்திகள், ஜாதி மதத்தைப் பற்றி பேசக்கூடாது என்றனர். பின் மறுபடியும் ராமசாமி அவர்கள் பேசும்போது "கோவாவுடன் இராணுவப் போர் தொடுத்தால்கூட இவ்வளவு பேர் செத்திருக்க மாட்டார்கள். கோவா போராட்டத்திற்குச் செல்லும் தொண்டர்களுக்கு அரசாங்கம் எந்தவிதமான உதவியும் செய்ய முன் வரவில்லை. அல்லது இறந்து போன, காயப்பட்ட வீரர்களுக்காவது ஏதாவது செய்திருக்கின்றார்களா என்றால் அதுவும் கிடையாது..." என்று கூறிக்கொண்டிருக்கும்பொழுது, மேடையிலுள்ள காங்கிரஸ் வாதிகள், 'அரசியலைப் பற்றிப் பேசக் கூடாது; பேசியது போதும்' என்று அவரிடம் மெதுவாகச் சொன்னார்கள். தோழர் ராமசாமி அவர்கள் அதை ஒலி பெருக்கியில் சொல்லியவுடன் மக்கள் அனைவரும் 'பேசு! பேசு!' என்று ஆரவாரம் செய்தனர். ஆனால் ஆளும் கட்சியினர் அவரை பேசவிடமறுத்தனர். மக்கள் அனைவரும் ஆரவாரத்துடன் மேடையை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அதற்குள் தோழர் ராமசாமி அவர்கள் மேடையைவிட்டு இறங்கி விட்டார். தலைவர் அவர்கள் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் மக்கள் உட்காரவில்லை. உடனே போலீஸ் வந்து அமைதியை நிலை நாட்டியது.

இதற்கெல்லாம் காரணமென்ன என்று பார்த்தால் வளர்ந்துவரும் இயக்கம்தான். நமது இயக்கம் பெரும் பங்கெடுத்துக் கொண்டதைப் பார்த்து அவர்கள் ஒவ்வொரு இடத்திலும் நம் இயக்கத்தைப் பற்றி குறை கூறிக் கொண்டே வருகின்றனர். ஒவ்வொரு இடத்திலும் கண்டனக் கூட்டம் போட்டு 'அடக்குமுறை ஒழிக' என்று கூறும் இவர்கள் கல்லக்குடியில் நம் இயக்கத் தோழர்கள் மீது சுட்டதை மறந்துவிட்டு உளறுகின்றனர்!

எம். பிரைட்.




# 'மணிமகுடம்'- ஒரு விளக்கம்!

மணி மகுடம், நாடகம் பார்த்த தோழர்கள் பலர் நாடகத்தைப் பாராட்டியும், இலட்சிய நடிகர் ராஜேந்திரன் அவர்களது நாடக மன்றத்தின் பணியைப் புகழ்ந்தும் ஏராளமாகக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதங்கள் எனக்குக் களிப்பூட்டுவனவாக மட்டும் அமையாமல், இன்னும் ஒருபடி மேலாகச் சென்று இலட்சிய ஓவியங்களைத் தீட்டிடத் தூண்டும் எழுச்சி முரசங்களாகவும் அமைந்துள்ளன என்பதை, கடிதம் எழுதியுள்ள தோழர்களுக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

நாடகத்தைப் புகழ்ந்த தோழர்களில் சிலர், நாடகத்தின் முடிவு தாங்கிக் கொள்ளக் கூடியதாய் இல்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள் புதுமைப் பித்தனாக மாறுவேடமணிந்து மக்கள் மனதை வளப்படுத்த முயலும் மணிமாற அரசனும். அவன் காதலி புரட்சித் தலைவி அல்லியும், சாகாமல் இருந்திருக்க வேண்டும் — என்று தங்கள் ஆசையை வெளியிட்டிருக்கிறார்கள்.

தங்களது கருத்துக்களை, நேசத்தோடும், பாசத்தோடும் அறிவித்த அவர்களது பெருந்தன்மைக்கு என் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"புதுமைப்பித்தனும் அல்லியும் சாகக்கூடாது!" என்ற எண்ணம் தோழர்கள் மனதிலே தோன்றுகிறது என்றால், அதுதான் நாடகத்தின் வெற்றியென்று நான் கருதுகிறேன். அப்படித் தோன்றுகிற அந்த எண்ணந்தான் எரிமலையாக மாறும் என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் நான். இந்தகைய சோக முடிவுகள்தான் சோம்பிக் கிடக்கும் சமுதாயத்திலே சூறாவளியை எழுப்பக் கூடியவை என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

உதாரணம் ஒன்று கூற ஆசைப்படுகிறேன்: அறிஞர் அண்ணா அவர்கள் எழுதி, நாடெங்கும் நடிக்கப்பட்ட 'சந்திரோதயம்' நாடகத்திலே—துரைராஜ் என்னும் வாலிபன், சமுதாய உயர்வுக்காக இன்னல்கள் பல ஏற்று, வேடதாரிகள் பலரை நாட்டோர் முன்னிலையில் நிறுத்தி, கொள்கை முழக்கம் செய்து, இறுதியில் விஷமருந்தி செத்து விடுகிறான். துரைராஜ் வேடத்திலே அண்ணா அவர்களே நடித்திருக்கிறார். அந்தக் கட்டத்திலே நாடகம் காணும் மக்கள் கண்ணீர் விடுவர்—'அய்யோ, இவ்வளவும் செய்தவன் இப்படிப் போய் விட்டானே' என்று ஏங்குவர்! அந்த ஏக்கமும், கண்ணீரும்—நாடகத்திலேவரும் துரைராஜ் செத்ததுபோல, நாட்டிலே உலவும் 'துரைராஜ்கள்' சாகக்கூடாது என்ற உறுதியை மக்களுக்கு அளிக்கத் தவறவில்லை.

அதே ஆசையிலேதான் மணிமகுடத்திலே வரும் புதுமைப் பித்தன் — அல்லி ஆகியோரின் முடிவையும் சித்தரித்திருக்கிறேன்.

மதுரையிலேயிருந்து புத்தனேரி வெங்கடாசலம், ரவி—என்ற அருமைத் தோழர்கள் இருவர், மணிமகுடத்திலேவரும் புதுமைப் பித்தனின் முடிவு, பொது வாழ்வில் இருப்போரை பயமுறுத்துவதுபோலிருப்பதாக எழுதி யிருக்கிறார்கள்.

நாடுகள் பலவற்றிலே—நல்ல கருத்துக்களைச் சொன்னவர்கள் பலர்—நஞ்சு கொடுக்கப்பட்டும், வெட்டுப் பாறையில் வீழ்த்தப் பட்டும் – ஒழிக்கப்பட்டார்கள் என்ற சரித்திரங்களைப் படித்த பிறகும்தான், நாம் பொது வாழ்விலே இருக்கிறோம்; பணியாற்றுகிறோம். ஆப்ரகாம் லிங்கன், சாக்ரடீஸ், காந்தியார் ஆகியோரின் முடிவுகள் கண்டு, பொது வாழ்வை விட்டு ஓடிவிடவில்லையே நாம்!

கத்திகள், கம்புகள், கல்மாரிகள், கனல் கிளம்பும் கண்டனங்கள், இவைகளைவிட ஆபத்தான முறையிலே பின்புறத் தாக்குதல்கள் — இந்தனையும் எதிர்த்து வரினும், எதையும் தாங்கும் இதயங் கொண்டுதான் நாம் பொது வாழ்விலே பீடு நடை போட்டு வருகிறோம். ஆகவே, பொது வாழ்வு என்பது பூமாலைகளோடு நின்று விடுவதில்லை—புதிய புதிய கணைகளையும் நம் மார்பிலே சொருகிக் கொண்டுதானிருக்கும். இந்த உண்மையை எடுத்துக் காட்டுவதுதான் 'மணிமகுட'த்தின் முடிவு!

அதுமட்டுமல்ல; பலாத்காரத்திலே நம்பிக்கையுள்ள மக்கள் மன்றத்துத் தலைவனாகிய பொன்னழகனின் கொள்கை தவறானது என்பதை, தன் உயிர்த் தியாகத்தின்மூலம் மெய்ப்பித்து, அவனது மனதையும் பக்குவப் படுத்திட புதுமைப் பித்தனின் சாவு பயன்படுகிறது என்கிறேன், நான்.

பொதுவாக, நாடகங்களிலே இன்ப முடிவு — அவல முடிவு என இரு முடிவுகள் உண்டு. ஷேக்ஸ்பியர் எழுதிய பல உயர்ந்த நாடகங்கள் அவல முடிவு கொண்டவைதான். நம் நாட்டைப் பொறுத்த வரையிலே அவல முடிவுகள் மக்கள் மனதைக் கலங்கச் செய்கின்றன. இரு முடிவுள்ள நாடகங்களையும் காணக்கூடிய பண்பை மக்களிடம் வளர்த்துத் தீர வேண்டுமே தவிர, அவல முடிவுகள் உள்ள நாடகங்களை மாற்றியமைப்பது என்பது பொருத்தமுடையது என நான் ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை.

அவல முடிவு கொண்ட 'லைலா மஜ்னு' — 'அனார்கலி'— 'ரோமியோ ஜூலியட்' வெற்றி பெற்ற நாடகங்கள் — திரைக் காவியங்கள்! ஏன்; அம்பிகாபதி, கண்ணகி நாடகங்கள்தான் என்ன! புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய அவல முடிவு கொண்ட 'எதிர்பாராத முத்த'த்திலே காதலர்கள் இறந்ததும், அவர்களுடைய இறப்புக்குக் காரணமான ஆரியர்கள்மீது நமக்கு அடங்காத கோபம் பிறந்தது; அதே காவியம் 'பொன்முடி'யாக மாறி இன்ப முடிவு பெற்றதும், அந்த முடிவு. தோல்விக்கு ஒரு காரணமாக அமைந்துவிட்டது. இன்ப முடிவுகளே நாடகத்திலே கூடாதென்பவனல்ல நான். அத்தகைய நாடகங்களும் தீட்டியிருக்கிறேன். மணிமகுடத்தைப் பொறுத்தவரையிலே மக்களின் எழுச்சியைக் காண, இந்த முடிவே சரியானது எனக் கருதுகிறேன்.

நாடகமோ, திரைப் படமோ, எதுவாயினும் என்னால் எழுதப் படும்போது, என்னைக் கவர்ந்த கொள்கைகளை அதிலே பதித்து வைத்திட நான் என்றைக்கும் தவறியதில்லை. விட்டுக் கொடுத்ததுமில்லை.

'ஒரே கொள்கைப் பிரச்சாரமாயிருக்கிறதே; இதை எப்படி படமாக்குவது?'—என்றனர் சில படத் தொழிலதிபர்கள்! தோழர்களேகூட சிலர் கேட்டனர். "இதையும் படமெடுக்க ஒரு காலம் வரும்" என்று மட்டுமே அவர்களுக்குப் பதில் சொன்னேன்.

"நல்லவேளை, நாடகத்திற்கு 'சென்சார் போர்டு' இல்லை" என்றனர். "தடைதான் போடுவர்; அப்படிப் போட்டால், நானே நடிக்கத் தயார்" என்றும் கூறினேன். "தயாராகவும் இருக்கிறேன். தலைமைக் கழகத்தின் சம்மதம் பெற" என்றும் குறிப்பிட்டேன்.


ஒரு சுவையல்ல; நாடகத்திற்கு ஒன்பான் சுவையும் தேவை!

அந்த சுவைகளோடு—நமது சுந்தர திராவிடத்திற்குத் தேவையான இலட்சியக் கருத்துக்களை இயன்றவரையில் மணிமகுடத்தில் நிரப்பியிருக்கிறேன். இதனை நடிப்பதற்கு அருமை நண்பர்கள் ராஜேந்திரனும், நடிகமணி நாராயணசாமி அவர்களும் முன் வந்தார்கள். அவர்களுக்கு இலட்சியவாதிகள் சார்பிலே, அறிவியக்கத்தின் சார்பிலே நன்றி கூறுகிறேன்.

நாடகத்தைப் பாராட்டியும், ஐயங்கள் எழுப்பியும், அபிப்பிராயம் கூறியும், தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதிய நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.





# கேரளத்து....

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

தம்பி தனியாள்! அவன் எதிர்த்துக் கொடி தூக்கியிருப்பதோ ஒரு ஏகாதிபத்ய அணி வகுப்பு!

திருவாங்கூர்த் தரணி எங்கும் தம்பி தட்டிய உரிமை முரசம் எதிரொலித்தது. ஒரு சமயம் மூன்று ஐரோப்பிய அதிகாரிகள் ஒரு துரைசானியுடன் செல்ல—மேன்மை தங்கிய அரசரின் 12-வது பட்டாளத்தைச் சேர்ந்த முப்பது வீரர்கள் மெய்காப்புக்கு வர—கொச்சியிலிருந்து கொல்லத்துக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். அலெப்பிக்கு அருகிலே அந்த யாத்ரீகர் கோஷ்டியை விடுதலை வீரர்கள் பிடித்துக் கொண்டனர். ஆங்கிலப் பெண்மணியைத் தவிர மற்ற யாவரும் கொலை செய்யப்பட்டார்கள். அந்தத் துரைசானி மாத்திரம் உயிருடன் கொச்சி நகர் செல்ல அனுமதிக்கப்பட்டாள்.

இது இரக்கமற்ற படுகொலை என்று வர்ணிக்கப்படலாம். ஆனால் இதைவிட காட்டுமிராண்டித்தனம் சொண்டதாகும் கம்பெனியாரின் துரைத்தனம்!

—இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தம்பியைத் தூக்கு மேடைக்கு அனுப்பப் படும் முயற்சிகள் வெகு துரிதமாக நடைபெற்றன.

தம்பியைப் பிடித்துத் தருகிறவர்களுக்கு ஐம்பதினாயிரம் ரூபாய்கள் பரிசு தருவதாக அறிவித்தனர்!

தம்பியின் படையினரை சின்னாபின்னமாக்க சூழ்ச்சித் திறன்மிக்கப் படைத் தலைவர்கள் திருவாங்கூர்ச் சீமைக்குத் தருவிக்கப்பட்டார்கள்.

கர்னல் லெகரின் படைகள் தம்பியின் படைகளைச் சந்திப்பதற்காக அரம்பாலிக் கணவாய்க் கருகிலே தங்கியிருந்தனர். திருவாங்கூர்த் துருப்புகள் தம்பியின் தலைமையிலே கணவாயைக் காவல் புரிந்தன.

அப்போது தம்பியின் கை ஓங்கியிருந்தது. லெகரிடம் பீரங்கிகள் குறைவு. ஏதாவது சூது புரிந்தால்தான் அவனால் கணவாயைத் தாண்டமுடியும்.

இரவு வந்தது. இருட்டிலே லெகரின் படைகள் மலைமீது ஏறி, பொழுது விடிவதற்குள் மறு பக்கத்துக்குத் தாவிவிட்டனர். இது மட்டுமா? சூழ்ச்சி தெரியாத தம்பியின் படைகளைத் திடீரென்று தாக்கி தவிடு பொடி செய்தனர்.

தம்பி ஓடினான். படை இழந்தான். புலி நிகர் வீரர்களைப் பலி கொடுத்தான். நிலை குலைந்து, தலை குனிந்து வாழும் திருவாங்கூர்ப் பூமியை வெள்ளைத் திருடர்களிடமிருந்து மீட்கும் இலட்சியம் மட்டும் அவனைப் பற்றிக்கொண்டே இருந்தது!

தோல்வி வரும் என்பது அவனுக்கு முன்பே தெரியும். பலி பீடத்திலே தலை கொடுக்கத் தன்னை தயார் செய்த பிறகு தான் விடுதலைப் போர் தொடுத்தான். சாவதற்கு ஆசைப்பட்டா? இல்லை. தென்னகத்திலே ஊமைகள் இல்லை; உயிரே போவதாயினும் உரிமைக் குரல் கொடுக்கும் வீரர்கள் உண்டு—என்பது பரங்கியர் நெஞ்சிலே பாய வேண்டுமென்பதுதான் அவன் இலட்சியம்.

நாடோடியாய் தம்பி மண்ணடியை அடைந்தான். வெள்ளையரின் தலைகளைச் சீவியெறிய ஆயுதம் எடுத்திருந்த வீரர்களின் அணிவகுப்பினிடையே ஏறுநடை போட்டவன் அறுதையைப் போல ஆனான். பகவதி கோவில் இந்த விடுதலைப் பரிதிக்கு பாதுகாப்பான இடமாக இருந்தது.

தலையைக் கொண்டுவருவோருக்கு வெள்ளையன் ஐம்பதாயிரம் வெள்ளைப் பணங்களை வாரிவழங்குவானாம்! — எந்த நேரத்திலும் தம்பியின் உயிரைக் கொத்திச் செல்ல வேவுகாரக் கழுகுகள் வட்டமிட்டபடி இருந்தன.

எத்தனை நாளைக்குத்தான் தம்பி, இருட்டிலும், இன்னலுக்கு மத்தியிலும் வாழமுடியும்? எதிரியின் கையில் கிடைத்தாலோ அவன் சவத்தைக் காட்டியே நாட்டு மக்களிடையே உருவாகியிருக்கும் விடுதலைக் கனவில் நீரூற்றிவிடுவார்கள்.

தம்பி ஒரு முடிவுக்கு வந்தான்; ஆமாம்—தன் உயிருக்குத் தானே முடிவு தேடிக் கொள்வதென்று!

வாளை உறை கழற்றினான். எதிரியின் தாள் பணியாப் பரம்பரை, உருவிய வாளின் முனையை ஒரு முறைத் தடவினான். அன்னிய நாட்டினரின் அகன்ற மார்புகளை ஊடுருவி, ஊடுருவி அது கூர் மழுங்கியிருக்கும் தன்மை கண்டு தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டான்.

மறு நொடியிலே அந்த வாள் அவன் நெஞ்சிலே புகுந்தது. அய்யோ! அதுதான் கூர் மழுங்கிய வாளாயிற்றே! எப்படி அந்த இரும்பு நெஞ்சத்திலே பாயமுடியும்?

ஆமாம்; பலமான காயந்தான் ஏற்பட்டதே தவிர அவன் பிராணன் போகவில்லை.

பக்கத்திலே தம்பியின் தம்பி பத்மநாபன் கண்ணீர் மல்க—மூடிய கண்களோடு நின்றிருந்தான்.

தம்பியின் வாய் அசைந்தது. "தம்பி! கடைசி நேரத்தில் உன் அண்ணனின் ஆசையை நிறைவேற்றுவதாக எனக்கு உறுதி அளிப்பாயா?"

"ஆணையிட்டுச் சொல்கிறேன், அண்ணா! உங்கள் அன்புக் கட்டளையைச் சொல்லுங்கள்—செய்து முடித்துவிட்டுச் சாகிறேன்"

"தம்பி! உன் அண்ணன் உடனே சாகவேண்டும். நிறைவேற்று என் உத்தரவை!"

பத்மநாபன் தயங்கினான்.

"ஏனப்பா தயங்குகிறாய்? குற்றுயிரும் குலை உயிருமாய் கிடக்கும் உன் அண்ணன் படும் அவஸ்தைகளை நீ கண்டு ஆனந்திக்க ஆவல் படுகிறாயே! வேண்டாம் கண்ணே, என் விடுதலை கூடவா தாயக விடுதலையைப் போல தாமதமாக நடைபெற வேண்டும்? கூடாது தம்பி, கூடாது! எடு உடை வாளை! அதன் முனையால் தொடு என் இதயத்தை!"-தம்பி கதறினான்.

அந்த சித்ரவதையைப் பத்மநாபனால் தாங்க முடியவில்லை.

பிறகு?

அண்ணனின் உத்தரவை அரைநொடியில் அமுலாக்கினான். பூட்டிய சாவுச் சிறையின் கதவுகளைத் திறந்துவிட்டான்!

வேலுத் தம்பி மறைந்துவிட்டான். அல்ல; அல்ல—சரித்திரத்தில் புகுந்துவிட்டான்!

★

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

"எனக்கு உதவி மந்திரிகள் வேண்டும்" என்றார் பிரதமர், டேவிட்! உடனே கவர்னர் சொன்னார்; "உதவி மந்திரிகள் அமர்த்திக்கொள்ள அரசியல் சட்டம் அனுமதிக்காது" என்று.

"அப்படியானால் அந்த அரசியல் சட்டம் தேவையில்லை; மந்திரிப் பதவியும் எனக்குத் தேவையில்லை; நான் ராஜினாமா செய்கிறேன். ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றார். "சிங்கப்பூர் சுதந்திரம் அடைய வேண்டும்"—என்று தீர்மானமும் போட்டார்.

தீர்மானம் சபாநாயகரிடம் தரப்பட்டது.

சபாநாயகர் கவர்னரிடம் அனுப்பினார். கவர்னர் ஓடிவந்தார். சந்தித்தார். என்ன முடிவு ஏற்பட்டிருக்கிறது?

"இன்னும் ஒன்பது மாதங்களிலே லண்டனில் கூட இருக்கும் வட்ட மேஜை மகா நாட்டிலே சிங்கப்பூரின் விடுதலை குறித்து முடிவு தெரிவிக்கப்படும்" என்று உறுதி தரப்பட்டிருக்கிறது, கவர்னரால்!

எதைக் காட்டுகிறது இந்த சிங்கப்பூர் நிகழ்ச்சி!

மாநில மாநாட்டிலே நாம் வெளியிட்டோம்—மறுபடியும் பலபல மேடைகளிலே நாம் பேசினோம்—தேர்தலில் நின்று தி. மு. கழகம் சட்டசபையைக் கைப்பற்றும். உடனே திராவிட நாட்டுப் பிரிவினையை பிரகடனப் படுத்துவோம். ஏற்றுக் கொள்ளாவிடில், 'சட்டசபைப் பதவி தேவையில்லை' என்று ராஜினாமா செய்வோம். மீண்டும் தேர்தலுக்கு நிற்போம். மறுபடியும் ராஜினாமா செய்வோம்.

இப்படியே ராஜினாமா செய்து கொண்டேயிருந்தால், ஒரு நாள் நம்முடைய திராவிடநாடு பிரிவினைத் தீர்மானம் நிறைவேறாமலா போகும்? வெற்றி ஏற்படாமலா போகும்?—எனக் கேட்டோம்!

நமது தீர்மானம் கேட்டு, கேலி பேசினர் பலர்—குத்திக்காட்டினர்—என்னென்னமோ சொன்னார்கள்.

"தேர்தலில் வெற்றியடையவார்களாம்; உடனே ராஜினாமாவும் செய்வார்களாம்; மறுபடியும் நிற்பார்களாம்; மீண்டும் ராஜினாமா செய்வார்களாம்! நன்று; நன்று!" என்ற கிண்டல் கணைகள் ஆயிரமாயிரமாகப் பாய்ந்தன.

இதோ, சிங்கப்பூர் சொல்கிறது "விடுதலை வேண்டும்" என்று!

"நான் ராஜினாமா செய்வேன்" என்று சொல்லுகிறார் அந்த நாட்டுப் பிரதமர்!

அந்தத் தீர்மானம் கேட்டு பயப்படுகிறது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்! அதுபோல் வடக்கத்தி ஏகாதிபத்தியம் நமது திராவிட நாட்டுப் பிரிவினைத் தீர்மானம் கண்டுபயப்பட எத்தனை நாட்கள் ஆகும்?

யாரோ ஒருவன், பால்காரனும்—பாலை விற்று கோழி வாங்குவேன்; கோழி முட்டைகளை விற்று ஆடு வாங்குவேன்; ஆடு விற்று மாடு வாங்குவேன்; மாடுவிற்று மாளிகை வாங்குவேன்; மளிகையிலே மந்தகாச முகவதிகள், "உன்னை மணக்கிறேன் கண்ணு!" என ஓடிவருவர்; அவர்களை இப்படி உதைப்பேன் என்று, பாலை உதைத்து கொட்டிவிட்டு—பல் இளித்து நின்றானும்; அதுபோல அல்ல இது!

உளி இருக்கிறது; எதிரே கல் இருக்கிறது—சிலை செதுக்குகிறோம் என்கிறோம்—தவறா?

தூரிகை இருக்கிறது; துணி இருக்கிறது—ஓவியம் தீட்டுகிறோம் என்கிறோம்—தவறா?

காதலன் இருக்கிறான்; காதலி இருக்கிறாள்—திருமணம் நடக்கட்டும் என்கிறோம்—தவறா?

புளி இருக்கிறது; மிளகாய் இருக்கிறது—குழம்புவைப்போம்; என்கிறோம்—தவறா?

எது தவறு?

நாடு இருக்கிறது—ஆளுவதற்கு நாங்கள் இருக்கிறோம் என்கிறோம். கேட்பது தவறா? அல்லது வெறும் ஆசையா; பால்காரன் கதையைப் போல? வசதியிருக்கிறது நாடான—ஆளுகிறோம்—என்கிறோம் இது எப்படித் தவறாக முடியும்?

எங்கள் குரலிலே மட்டும்தானா இந்தப் பிரிவினை உணர்ச்சி தொனிக்கிறது?

வடநாடு—தென்னாடு என்ற பிரிவினை உணர்ச்சி அரசியல் பீடத்திலே இருப்பவர்களால்—ஆளும் வர்க்கத்தினரால் பேசப்படவில்லை என்று நினைக்கிறீர்கள்?

சென்னை நிதி மந்திரி சி. சுப்ரமணியனார் பேசியிருக்கிறார். என்ன பேசியிருக்கிறார்? "தென்னாட்டிலே பெரிய தொழிற்சாலைகள் எதுவும் இல்லை" என்று. அதோடு நிறுத்திவிடவில்லை. "நாம் வடநாட்டிலிருந்து சர்க்கரை வரவழைக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே நமது பணம் வெளியே போகிறது!"—பேசியிருப்பது சுப்ரமணியம். கவனியுங்கள் தோழர்களே! வடக்கேயிருந்து சர்க்கரை வரவழைக்கிறோம்—ஆகவே நமது பணம் வெளியே போகிறது—அதைத்தானே நாமும் சொல்லுகிறோம். நாம் 'வடநாட்டுக்குச் செல்கிறது நமது பணம்' என்கிறோம். அமைச்சர் "வெளியே" என்கிறார், பதவியிலே அவர் கொண்டுள்ள ஆசையின் காரணமாக!

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

# சோதிடர் மகன்

★

"நூற்று எட்டுக்குள் ஒரு எண் சொல்லுங்கள்..."

"வந்து...நூற்றி நாலு..."

"ஏதாவது ஒரு பூவின் பெயர்...?"

"செண்பகம்..."

"ஓகோ...சரி" என்று சொல்லி விட்டு வீட்டுக் கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தார் சோதிடர்.

எதிரே உட்கார்ந்திருந்தஇரண்டு மனிதர்களும் சோதிடரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். அவர் என்ன சொல்லப் போகிறாரோ—என்ற துடிதுடிப்பு அவர்களின் முகத்தில் படர்ந்திருந்தது.

"நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள்?"—சோதிடர் கேட்டார்.

"ஒரு முக்கிய வியாபார நிமித்தம்—அது வெற்றி அடையுமா என்பதை சுவாமியிடம் தெரிந்துப் போக..."

"சரி...காணிக்கை எங்கே...?"

"காணிக்கை! தொகை எவ்வளவோ?"

"இருபத்தைந்து — அணுவல்ல; ரூபாய்!"

இருபத்தைந்து ரூபாய்கள் கை மாறின. சோதிடரின் முகம் மலர்ந்தது. இனியும் வந்தோரின் முகத்தை மலரச் செய்யாமலா இருப்பார்?

"வெற்றி! லட்சுமியின் ஏகப் பார்வைஉங்கள்இருவரையும்தான் தேடிக்கொண்டிருக்கிறது. அதோ அன்னை உங்களைப் பார்த்துவிட்டாள். வெற்றியேதான்! வெற்றியே தான்!"—சோதிடர் பலன் சொல்லி விட்டார்.

பறவைகளைப் போல பறந்தார்கள் அந்த வியாபார மனிதர்கள்!

★

மெரினா கடற்கரை — இரவு எட்டு மணி இருக்கும்! சாலையோர மரங்களில் ஒன்றில் சாய்ந்த வண்ணம் உட்கார்ந்திருந்தான் ஒரு சிறுவன். துணை யாருமின்றி—தன்னந்தனியாக அவன் உட்கார்ந்திருப்பதின் காரணம்தான் என்ன? அலை மோதிக் கொண்டிருக்கும் அவன் மனம் பதில்சொல்லுகிறது, கேளுங்கள் :

"தந்தை சோதிடர்—பொய்யை, யூகத்தைப் பணமாக்கும் மோசத் தொழில் புரிகிறாரே, அவரை என்ன செய்வது? சோதிடர் மகன் நான்—என்று சொல்லிக்கொள்ள வெட்கமாக இருக்கிறதே!" — இப்படி குமும்பிக் கொண்டிருந்தது அவன் மனம்.

அப்போது கொஞ்ச தூரத்தில் கிடந்த 'சிமெண்ட் பெஞ்சி'யிலிருந்து இருவர் பேசிக் கொள்வது அவன் காதுகளில் விழுந்தது.

"மணியாகிவிட்டதே, புறப்படலாமா அண்ணே?"

"புறப்படலாம்; விலாசம் பத்திரமாக இருக்கிறதா?"

"இல்லாமலா? ஒரே இரவிலே ஓராயிரம் கிடைக்குது; இந்தக் கவனம் கூடவா இருக்காது?"

"சரி; சரி! அதான் சோதிடருக்கு இருபத்தைந்து ரூபாய் தாராளமாக எடுத்து நீட்டினையோ?"

"பின்னே என்ன? நம்ப செய்யப்போவதோ திருட்டு வியாபாரம்! நமக்கோ ஒரே பயம்—பதட்டம்! யாராவது சாதகமா நாலு வார்த்தை சொல்லவேண்டாமா? அதுவும் அவர் பிரபல சோதிடராம்; சொன்னது தவறாதாம்! இருபத்தைந்தென்ன; இன்னும் ஐம்பது கூடவே தந்திருக்கலாம்"

"அது சரி அண்ணே! வைக்கோல் வண்டி 'ரெடி'தானே! பத்திரமா போகணுமே!"

"அதெல்லாம் நீ ஏன் கவலைப் படுறே? விலாசத்தை விசாரிச்சுக்கிட்டு போகலாம். வீட்டை கண்டுபிடிச்சு—அந்த ஆளுகிட்டேயிருந்து 'சரக்கை' வாங்கினாத்தான் எனக்கு நிம்மதி — அமைதி—எல்லாம்..."




சிறுவன்-அவன்தான் சோதிடர் மகன் 'சட்'டென்று எழுந்தான். கடற்கரைத் தெருவில் வேகவேகமாக நடந்தான்.

பின்னாலிருந்து கைதட்டல் சப்தம் எழும்பியது 'தம்பி' என்று அழைக்கும் குரலும் கேட்டது. சிறுவன் திரும்பிப் பார்த்தான். அந்த இரண்டு மனிதர்களும் அவனைத்தான் அழைத்தார்கள்.

அவனுக்கு ஏனோ பயம் தோன்றியது. 'அவர்கள் என்னை அழைப்பானேன்? இதென்ன புதிர்?'—என்ற எண்ணம் எழும்பியது. அதற்குள் அந்த மனிதர்கள் அவனை நெருங்கிவிட்டார்கள்.

"ஏன் தம்பி? நீ இந்த ஊர் தானே?"

"ஆமாம்; உங்களுக்கென்ன அதுபற்றி?"

"கோவிச்சுக்காதே தம்பி! நாங்கள் இந்த ஊருக்குப் புதிசு. இந்த விலாசம் உனக்குத் தெரியுமா பாரு?"—ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து நீட்டினார் அந்த இருவரில் ஒருவர்.

அவன் பார்த்தான். "நடராசன், 42, பெருமாள் சன்னதித் தெரு, ராயப்பேட்டை" என்றிருந்தது.

சிறுவன் ஏதோ யோசித்தான். "ஓ, எனக்கு நல்லாத் தெரியுமே! பெரிய பணக்காரராயிற்றே அவர்: பங்களாகூட ரொம்ப அழகாயிருக்குமே! பக்கத்திலேதான் என் வீடும் இருக்கிறது. என்னோட வந்தீங்கன்னு காட்டுவேன்"— என்றான் அவன்.

"அப்போ ரொம்ப நல்லதா போச்சு தம்பி!"—என்றனர், இருவரும் ஏககாலத்தில்.

அவனுடன் நடந்தனர். அவர்கள் மனதிலோ சட்டத்தை மீறி நடத்தப் போகும் வியாபாரம்—அது குவிக்கப் போகும் பெரும் பொருள்—இவை நடமாடிக் கொண்டிருந்தன. அவன் மனதிலோ...? அவன் பிஞ்சு நெஞ்சிலே என்ன என்னவோ எண்ண அலைகள்!

கடற்கரைத் தெருவைத் தாண்டி, லாயிட்ஸ் ரோடில் இறங்கினார்கள். ராயப்பேட்டையை நோக்கி நடந்தார்கள்.

★

"இதாங்க அவரு வீடு..."

ஒரு பெரிய மாடி வீட்டின் முன் அவர்கள் நின்றார்கள். பையன், "நான் போகட்டுமா?" என்றான்.

"இரு, தம்பி" என்று சொல்லிக்கொண்டு தன் சட்டைப் பைக்குள் கையை விட்டார் ஒருவர். ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்தார். அவனிடம் நீட்டினார். "இதோ, உன் உதவிக்கு எங்கள் பரிசு!" என்றார். பையன் வாங்கிக் கொண்டான்.

அவர்கள் வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

உள்ளே ஒரு பெரிய மனிதர், சாதாரணஉடையணிந்துகொண்டு உட்கார்ந்திருந்தார்.

இருவரும் உள்ளே புகுந்தார்கள். தாங்களாகவே கதவைச் சாத்தினார்கள்!

"யார் நீங்கள்?"—வீட்டுக்காரர் கேட்டார்.

"பயப்படாதீர்கள். நாங்கள் தான். உங்கள் கடிதம் கிடைத்தது. பணத்துடன் வந்துவிட்டோம். இரவு இரண்டு மணிக்கு வைக்கோல் வண்டி கொண்டு வருகிறோம். பாட்டில்களை மறைத்துக்கொண்டு சென்று விடுகிறோம்..." என்று மெதுவாக சொல்லிக்கொண்டே, தன் பையிலிருந்து 'கரன்சி' நோட்டுகளை எடுத்தார் ஒருவர்.

பணத்தை இருவருமாகச் சேர்ந்து எண்ணினார்கள். எண்ணி முடித்தார்கள். பணத்தை நீட்ட எதிரே பார்த்தார்கள். 'ஐயோ!' என்று அலறிவிட்டார்கள். எதிரே கையில் கைத் துப்பாக்கியுடன் நின்றுகொண்டிருந்தார், அந்த மனிதர். மன்னிக்க: சாதாரண மனிதரல்ல; போலீஸ் இன்ஸ்பெக்டர்!

அது கள்ளச் சாராய வியாபாரியின் வீடல்ல; போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரின் வீடு! அவர்களைப் பிடித்துத் தர சிறுவன் செய்த தந்திரம் எப்படி?

அதே சமயம் கதவு திறக்கப்பட்டது. நமது சிறுவன்தான் நுழைந்தான். நடந்ததைச் சொன்னான், சாதாரண உடையிலிருந்த இன்ஸ்பெக்டரிடம். சிறுவனின் திறமையை மெச்சினார், அவர். அந்த இருவரின் கைகளிலே விலங்கையும் மாட்டினார்.

★

'கள்ளச் சாராய வியாபாரிகளை விலங்கிட்டு தெருவழியே அழைத்துச் செல்கிறார்கள்' என்று செய்தி அறிந்து வாசலுக்கு ஓடி வந்தார், சோதிடர். பார்த்தார். மறுகணம் அவர் மனம் ஏனோ மாறியது. விலங்கோடு சென்று கொண்டிருந்த அந்த இருவரும் அவரைப் பார்த்த பார்வை—அப்பப்பா! அதில்தான் எத்தனை ஆத்திரம்—அடங்காத கோபம்!

"வெற்றி!" என்ற குரல் கேட்டுத் திரும்பினார் சோதிடர். மகன் நின்று கொண்டிருந்தான் பக்கத்தில், கையில் பணத்துடன்! அந்த ஐந்து ரூபாயைத் தந்தையிடம் நீட்டினான். விபரம் சொன்னான். அவருக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

இருந்தாலும் பணத்தைக் கை நீட்டி வாங்கிக் கொண்டார். கைகள் நடுங்கின. மீண்டும் தெருவில் பார்த்தார். அந்த இருவரும் அவரையே முறைக்கப் பார்த்தார்கள். 'இருபத்தைந்துடன் ஐந்தும் சேர்ந்து கொண்டதோ, இருக்கட்டும்: இருக்கட்டும்' — என்று சொல்லுவது போல இருந்தது அவர்களது பயங்கரப் பார்வையிலே மின்னிய கோபமும், கொடூரமும்!

★

இப்போது 'சோதிடர் சோமு' என்ற 'போர்டு' அவரது வீட்டில் தொங்கிக் கொண்டிருக்கவில்லை. ஆமாம்; அவர் அத் தொழிலை விட்டுவிட்டாராம்: அவரது மகனுக்கும் கொள்ளை மகிழ்ச்சியாம்!

—சொர்ணம்.

★


'முரசொலி'

இலங்கைத் தோழர்களுக்கு:

ஆண்டு சந்தா 6—0—0
6—மாத சந்தா 3—8—0

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

வெளிநாடு

ஆண்டு சந்தா 7-0-0
ஆறுமாத சந்தா 4—0—0

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

மூன்று மாத சந்தா கிடையாது.

# 'எழுத்தாணி'

பி. எம். இஸ்மாயில்; ஆரணி

(?) பத்திரிகை உலகில் உலவும் செல்லாக்காசுகளின் கடைசி நாள் எது?

உங்கள் போன்றுர் அந்தப் பத்திரிகைகளை வாங்கி செப்புக்காசுகளை அனுப்பாத நாள்தான்!

(●) இராம. நடராசன்; சென்னை—14.

(?) ஆச்சாரியார் சென்னை முதல்வராக இருந்திருந்தால் 400—கோடியும் கிடைத்திருக்கும் என்கிறேன்; சரிதானு?

தவறு. ஆச்சாரியார பூணூல் தரித்த பூசுரராயிருக்கலாம் இருந்தாலும் அவர் தென்னுட்டுக்காரராயிற்றே; எப்படித் தருவாரகள்?

(?) ஐந்தாண்டுத் திட்டத்தைச் செந்தேன் என்போர் யார்?

அதிலே வடநாட்டுச் சுரண்டல் என்னும் சற்றெறும்பு மாய்த்திருப்பதை உணராதார!

சு. ப. அழட்பன்; பலவான்குடி.

(?) நீர் இந்த நாட்டின் பிரதமராக இருந்தால் கோவாப் பிரசனைக்கு என்ன செய்வீர்?

சலாசரைச் சந்திப்பேன்; சமாதானத்துக்குக் கட்டுப்படும்படி புத்தி கூறுவேன். அந்த முயற்சி தோற்றால் சலாசரும் நிஜாம் தான என்பதை நிரூபிப்பேன்!

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(●) இராம. நடராசன்,
புதுக் கல்லூரி,
இராயப்பேட்டை,
சென்னை-14.

பம்பைராணி; சென்னை.

(?) ஓய் எழுத்தாணியாரே! மல்லிகை மலருக்கும் சேற்றுக்கும் உள்ள ஒற்றுமையைக் கூறும் பார்ப்போம்!

இரண்டுமே காலப்போக்கில் காய்ந்துவிடும்!

கதிரேசன்; மலாக்கா.

(?) சென்னையில் டிராம் நின்று விட்டதாமே?

ஆமாம்; கூச்சல் கிளப்பி வந்த டிராம் நின்றுவிட்டது. அதற்குப் பதில் சிந்தாதிரிப்பேட்டைத் தோழர் ஒருவர் அந்தத் திருப்பணியைத் தொடர்ந்து நடத்திவருகிறா.

சீவகன்; பூதலூர்.

(?) பெர்னுட்ஷா இறுமாப்பு கொண்டவராமே?

ஆமாம்; அந்த வியாதியை உற்பத்தி செய்த கிருமியே அவர் தான்!

## கொள்கை வளருது கோபுரம் போலே!

### சென்னை (மயிலை)

9—9—55 வெள்ளி மாலை 6-மணிக்கு, மயிலை, கோபதி நாராயணசாமி செட்டித் திடலில், தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் அவர்கள் தலைமையில், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன்—ஆகியோர் பேசுவர்.

### கோப்பம்பட்டி

10—9—55 சனி மாலை 6-30 மணிக்கு, தேர்நிறுத்தத்திடலில், தோழர் டி. கே. பி. சாமி அவர்கள் தலைமையில். தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஜி. பராங்குசம்—ஆகியோர் பேசுவர்.

### ராசிபுரம்

11-9-55 ஞாயிறு காலை 9 மணிக்கு மாநில மாநாட்டு நிதிக்காக, ரங்கவிலாஸ் தியேட்டரில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், எம். ஜி. இராமச்சந்திரன்—ஆகியோர் பேசுவர்.

அன்று மாலை 6 மணிக்கு, புதுச்சந்தைப் பேட்டையில், தோழர் பி. ராமலிங்கம் அவர்கள் தலைமையில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு—பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

## கிளைக் கழகங்கட்கு வேண்டுகோள்

1956-ம் ஆண்டு திராவிடர் நாட் குறிப்பில், தி. மு. க. கிளைகளின் விவரங்களை வழக்கம்போல் வெளியிட இருப்பதால், ஒவ்வொரு கிளைக் கழகத்தின் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர்- இவர்களின் பெயர்களையும், எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது என்ற விவரத்தையும், 5—10—55க்குள் கிடைக்கும்படி, 'போர்வாள்' 147, பவழக்காரத் தெரு, சென்னை-1—என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கிளைக்கழக செயலாளர்கள் வேண்டிக் கொள்ளப் பெறுகிறார்கள்.

—பொறுப்பாளர், போர்வாள்.

# தேம்பி அழுகிறுன் — தேற்றுவாரில்லை !

★ 10-ம் பக்கத் தொடர்ச்சி

தி. மு. கழகம் மாத்திரம்தானு பேசுகிறது, தென்னுடு புறக்கணிக்கப்படுகிறது என்று?

ஐந்தாண்டுத் திட்டத்தில் எங்கள் தேவை இது—என்று 400 கோடிக்குத் திட்டம் கொண்டு சென்றுர்களே, என்ன ஆயிற்று? 200 கோடிதானே வந்திருக்கிறது? இந்த நிலை எப்படி ஏற்பட்டது? இத்தனைக்கும் திட்டத்தை எடுத்துச் சென்றவர்கள், 400 கோடிக்காக வாதாடச் சென்றவர்கள் மூவர். அமைச்சர் காமராசனுர்—அமைச்சர் சுப்ரமணியனுர்—அமைச்சர் பக்தவத்சலனுர்—இந்த மூன்றுபேரும் போனுர்கள்.

சாஸ்திரத்திலே சொல்லுவார்கள், "முட்டிக் கொள்ளப் போனுலும் மூன்றுபேர் போகக்கூடாது" என்று. அந்த சாஸ்திரத்தை மெய்ப்பிக்கத்தானே என்னவோ—இந்த மூன்றுபேரும் இமயத் தலை முட்டி, இங்கே வந்து விழுந்திருக்கிறுர்கள். "ஐயோ, 200 கோடி! 200 கோடி!" என்று அலறிக்கொண்டு!

கேட்டது நானூறுகோடி—கிடைத்தது இருநூறு கோடி! இன்னும் 200 கோடி எங்கே போயிற்று? நேரு தயாரித்திருக்கும் ஐந்தாண்டுத் திட்டம் அந்த 200 கோடியை ஏன் விழுங்கிற்று? வடக்கே பக்ரா நங்கல் என்ற ஒரு அணைக்கட்டுத் திட்டமாம்! அதற்குச் செலவாகும் 'காங்கிரீட்'டைக் கொண்டு, டெல்லியிலிருந்து நியூயார்க் நகரம் வரை நடைபாதை போடமுடியுமாம்!

இத்தகைய திட்டங்கள் அங்கே! இங்கே திராவிடன் தேம்பி அழுகிறுன்; தேற்றுவாரில்லை.

அதன் அடையாளமாகத்தான் ராஜேந்திர பிரசாத்திற்காக ராஷ்டிரபதி நிலயம் அமைக்கப்பட்டிருக்கிறது—'அவர் தென்னுட்டில் தங்கி சுற்றுப் பயணங்கள் நடத்துவார்' என்று கண்துடைப்பு நாடகம் நடத்துகிறுர், பந்த்!—'வடக்கே உட்கார்ந்து கொண்டு சுரண்டாதே' என்று நாம் வாய்கிழியக் கூவுகிறேம்-'சுரண்டவில்லை! உன் வீட்டிலேயே வந்துஉட்கார்ந்துகொண்டு சாப்பிட்டு ஒழிக்கிறேம்' என்று பதில் சொல்லுகிறுர்கள், அவர்கள். அயர்லாந்துப் புரட்சியின் போது, இப்படித்தான் அங்குள்ள இடங்களை ஆக்ரமித்து, அங்கே போய் ஆங்கிலேயர்கள் குடியேறினுர்கள். அப்படிக் குடியேறிச் சுரண்டிய இடங்களுக்கு பழைய பெயர் டெரி என்பது! அவர்களை அடிமைகொண்ட ஆங்கிலேயர் குடியேறியதும் அந்த இடத்திற்கு லண்டன்டெரி என்று பெயர்! அதைப் போலத்தான் தமிழ்நாட்டு நிலையத்தோடு, வடநாட்டு ராஷ்டிரபதி பெயரை இணைத்து—"லண்டன்டெரி" போல—ராஷ்டிரபதி நிலயமென ஒன்றை அமைத்துக் கொண்டிருக்கிறுர்கள். விலைமாது, கண்காட்டுவது—பொன் குவிப்பதற்காகத்தானே யொழிய, காதலை வெளியிட்டுக் காவியம் பாட அல்ல!—இதைத் தென்னகத்து மக்கள் புரிந்து கொள்ளாமலில்லை.

ரூபாயை வசதிக்காக நூறுகப் பிரிக்க திட்டம் தீட்டியிருக்கிறுர்கள்.

வசதிக்காக மட்டுமேல்ல; நாங்கள் வாழ்வதற்காக இந்த உபகண்டத்திலேயிருந்து திராவிடத்தைப் பிரிக்க வேண்டுமென்கிறேம்.

நூறுகப் பிரிக்கப்படும் பணம்.

பைசா என்று இருந்தால் குழப்பம் வரும் என்பதாகக் காரணம் காட்டி—அதற்கு "நயாபைசா" என்று பெயர் சூட்டியிருக்கிறுர்கள். நயா என்றுல் புதிய என்று பொருள்!

நயா பைசா—வட நாட்டு மொழி ஆதிபத்தியத்தின் அடையாளம்!

இதோ, தென்னகத்து இன எழுச்சியின் அறிகுறி—நயா திராவிடம்!

ஆம், தோழர்களே—நயா திராவிடம்!—புதிய திராவிடம்!—அந்த திராவிடத்தைப் பெற்றே தீரவேண்டும்—பெற்றே தீருவோம்!

புதிய திராவிடம் கிடைத்தால்—புழுதி மேட்டிலே புரளும் ஏழைகளுக்குப் புதிய வாழ்வு கிடைக்கும்—இலங்கையிலே குடியுரிமையின்றிக் குமுறி நிற்கும் ஏழு லட்சத்திற்கு மேற்பட்ட தென்னவர்களுக்கு வழி காட்டப்படும்—ஒளி பிறக்கும்—விழி திறக்கும்!—வெளி நாட்டிலே வேதனைப் புயலில் சிக்கித் தவிக்கும் சொந்த நாட்டுக்காரர்களின் எதிர் காலம் சுவை மிக்கதாக அமையும்! அந்த சுதந்திரத் திருநாள் கொண்டாட, சுழற்றுவீர் விடுதலை வாளை! — வெல்வோம்! — வெல்வோம்!! வாரீர், வாரீர், விடுதலைப் படையில் சேர வாரீர்!

✶

## அறிவிப்பு.

என் பெயரில் "அருள்நெறி" என்ற புத்தகத்தை மதுரை 'அறிவுப் பண்ணை' என்ற பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கிறுர்கள். அப்படிப்பட்ட பெயரில், அப்படிப்பட்ட புத்தகத்தை வெளியிட நான் யாருக்கும் அனுமதியோ, உரிமையோ அளிக்கவில்லை. என்னுடைய கருத்துக்கள் என்று அப் புத்தகத்தில் தப்பும் தவறுமாகவும், தாறுமாருகவும், இல்லாததும் பொல்லாததுமாகவும், மாற்றியும் திருத்தியும், என சொற்பொழிவுகளை வெளியிட்டிருக்கிறுர்கள்.

பொய்யையும், திருட்டையும் வாழ்க்கைக்கான வசதியாக வைத்துக் கொண்டு இழி தொழில் நடத்தும் தமிழகத்தின அவமானச் சின்னங்களாக இருக்கும் அவர்கள், என் பெயரில், என்னைக் கேட்காமல் புத்தகம் வெளியிட்டிருக்கிறுர்கள். அவர்கள்மீது வழக்குத் தொடுப்பதற்கான முயற்சி எடுக்கப் பட்டிருக்கிறது. நேர்மையான விற்பனையாளர்களும், பொது மக்களும் அவர்தம் இழி செயலுக்கு ஆதரவு தர வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,
**இரா. நெடுஞ்செழியன்.**
25—8—55.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.